விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 028 வள்ளுவர் ஆண்டு 2056 தை 03 வியாழக்கிழமை (16.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## போலி வாக்குறுதிகளை அள்ளி வீசிய அநுர அரசை விரட்டியடிக்க மக்கள் தயாராம்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

போலி வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த கும்பலை விரட்டியடிக்க மக்கள் தயாராகி வருகின்றனர் என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

"இனிவரும் தேர்தல்கள் எமக்கு வெற்றி வாய்ப்புக்களையே பெற்றுத் தரும். நாம் மீண்டெழுவோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், 15

## 13 சுற்றுலா வலயங்கள் உருவாக்க திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் புதிதாக 13 சுற்றுலா வலயங்களை உருவாக்கவுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித் 15

## எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைப்போம்

### ஜனாதிபதி அநுரவிடம் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்

(கொழும்பு)

**புதிதாகப் பதவியேற்றுள்ள அநுர அரசாங்கத்துக்கு எதிர்காலத்தில் தொடர்ந்து ஒத்துழைப்போம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.**

சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்விற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்றுப் பிற்பகல் சீன மக்கள் 15



## சிமெந்து விலையை குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

சிமெந்து விலையைக் குறைக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிமெந்து மீதான செஸ் வரியைக் குறைப்பதற்கு நிதி அமைச்சின் அதி 15

## அஸ்வெசும தொகையை அதிகரிக்க ஒப்புதல்

(கொழும்பு)

அஸ்வெசும பயனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை அதிகரிக்கும் திட்டத்திற்குப் பொது நிதி தொடர்பான பாராளுமன்றக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, மிகவும் ஏழ்மையான 15

## ஒரே சீனக் கொள்கையை இலங்கை ஆதரிக்கும்

### சீன ஜனாதிபதியிடம் அநுர

(பீஜிங்)

இலங்கை அரசாங்கம் ஒரே சீனக் கொள்கையை ஆதரிப்பதாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு சீனா 15

## இலங்கை - சீனா இடையே 15 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

பொருளாதாரம், கல்வி, ஊடகம் மற்றும் கலாசாரத் துறைகள் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோருக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தானதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

சீனாவிற்கு 4 15

## காசாவில் போர் நிறுத்தம் இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்புதல்

(காசா)

15 மாதங்களாக நடைபெற்று வரும் காசா போர் முடிவுக்கு வந்தது.



இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. 15

## கொழும்புக்கு வந்த 30 கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டன

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நிலவும் இடநெருக்கடி காரணமாக கடந்த 02

## இராணுவம், பொலிஸாரால் குருநகர் முற்றுகை

(யாழப்பாணம்)

யாழ்.குருநகர்ப் பகுதியில் பொலிஸார், இராணுவம், விசேட அதிரடிப்படையினர் இணைந்து முற்றுகையிட்டு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நேற்றிரவு 7 மணியளவில் குருநகர்ப் பகுதியை முற்றுகையிட்ட படையினர் குருநகரில் உள்ள ஒருசில வீடுகளில் மோப்ப நாயின் உதவியுடன் தனித் தனியாகச் சோதனை 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கருத்துக்களைப் பெறும் வேலைத்திட்டம் ஆரம்பம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

பாராளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சிகளின் வகை பொறுப்புக்களை மேற்கொள்ளும்போது, தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக புதிய முறைமை ஒன்றைச் செயற்படுத்துவதற்கு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்துக்கு இணைந்ததாக ஊடக மற்றும் ஆய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துவைத்து தொழிற்சங்கங்களின் வினைத்திறனான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

2025 வரவு செலவுத் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கும் போதான பிரதான விவாதம் மற்றும் குழுநிலை விவாதத்தின்போது சாதகமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதே இதன் பிரதான நோக்கமாகும். இதன்போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

பாராளுமன்றத்தில் சரியான தகவல்களின் அடிப்படையில் விவாதங்களுக்குப் பங்களிப்பதன் முக்கியத்துவத்தையும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் பங்கேற்பு செயல்முறையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். வரவு செலவுத் திட்ட விவாதத்திற்கு மட்டுப்படுத்தப்படாமல் பாராளுமன்ற அமர்வுகளுக்கும் தொழிற்சங்கங்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதன் மூலம் மக்கள் மயமான எதிர்க்கட்சி ஒன்றின் கடமைப் பொறுப்பை நிறைவேற்ற முடியும் என தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்து எதிர்க்கட்சிகளின் பிரதான அமைப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், பாராளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சியின் தரத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதற்காக தொழிற்சங்கங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகும் எனத் தெரிவித்தார்.

இதன்போது வரவு செலவுத் திட்ட விவாதம் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயம் ஊடாக சமூக ஊடக வலைத்தளங்களுக்கு 'வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது பிரஜைகள் உங்களின் கருத்துக்களுக்கு இடம் கொடுக்க எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் தயார்' என்ற வேலைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வட்சப் (0759570570) மற்றும் மின்னஞ்சல் முகவரி connect@oloparliament.gov.lk ஊடாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே என்ற முகவரிக்கு எழுத்து மூலமும் கருத்துக்களை அனுப்ப முடியும் எனப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பாராளுமன்றக் குழு கூட்டங்களைப் புறக்கணிக்க

## ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றக் குழுக் கூட்டங்களைப் புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுக்களில் ஆளும் கட்சி எதிர்க்கட்சிக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்காத காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பொது நிதிக் குழுவில் மட்டுமே எங்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் நிதிக்குழுக் கூட்டம் நடைபெறுவதால் SJB உறுப்பினர்கள் அதில் மாத்திரம் பங்கேற்பார்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (ம-7)

# வயலின் வித்துவான் மாரடைப்பால் மரணம்



யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த பிரபல வயலின்வித்துவான் சண்முகநாதன் திபாஹரன் (வயது-52) மாரடைப்புக் காரணமாக நேற்றுக் காலமானார்.

இவர் கொழும்பு கட்புல அரங்கற்கலைகள் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)



பட்டிப்பொங்கல் விழாவை சிறப்பிக்கும் முகமாக கோமாதா உற்சவம் நேற்று யாழ்ப்பாணம் அன்னசத்திரத்து ஞான வைரவர் ஆலய முன்றலில் மிகவும் சிறப்புற இடம்பெற்றது. (ம-7)

## இராணுவம்...

நடத்தினர்.

இச்செய்தி அச்சுக்கு போகும் வரை குருநகர்ப் பகுதியை முற்றுகையிட்டிருந்த படையினர் அப்பகுதியிலிருந்து தகுந்த காரணங்களின்றி வெளியேற யாரையும் அனுமதிக்கவில்லை.(ம-7)

## 30 கப்பல்கள்...

இரு வாரங்களில் துறைமுகத்துக்கு வந்த 30 வரையான கப்பல்கள் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. துறைமுகத்துக்குள் நிலவும் இடப்பற்றாக்குறையே இதற்கான பிரதான காரணமென போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 25.01.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தெய்வம்

### அமரர் இராசா பூபாலச்சந்திரன்

(பூபாலப்பா)

அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் 21.01.2025 செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதி கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(C-2048)

இங்ஙனம்-
பூபாலப்பா குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 17.12.2024 அன்று இறைபதம் அடைந்த நமது பாடசாலையின் முன்னைநாள் அதிபர் திரு. வீரகத்தி இந்திரலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் வைரமுத்து வீரகத்தி

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம். ஓம் சாந்தி சாந்தி சாந்தி ..

பாடசாலைச்சமூகம்
யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்

(C-2047)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் இல்லாத நாட்டில் பாதுகாப்பிற்கு அதிக நிதி ஏன்?

## அநுர அரசை விளாசும் ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டத்தில் கல்விக்காக 271 பில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ள நிலையில் பொதுப் பாதுகாப்புக்காக 614 பில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளதாகவும் இது தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்த கல்விக் கொள்கைக்கு முரணானது எனவும் ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்குமாறு கடந்த அரசாங்கங்களை வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி, போர் இல்லாத சூழலில் பாதுகாப்புச் செலவை அதரிகரித்தது ஏன் என சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேள்வியெழுப்பியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் மூலதனச் செலவு 76 பில்லியன் ரூபாவாக இருந்தாலும் கல்விக்கான மூலதனச் செலவு 65 பில்லியன் எனக் கூறிய அவர் கல்விக்கு இதை விட நிதியை ஒதுக்க வேண்டும் என வெளிப்படுத்தினார்.

இதேவேளை, கல்விக்காக 6 வீதத்தை ஒதுக்குங்கள் எனக் கோரி, பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மாணவர் சங்கம் அண்மையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# அரசின் செயற்பாடுகளால் பொதுமக்கள் விரக்தி

## விமர்சித்த சம்பிக்க

(கொழும்பு)



தற்போதைய அரசாங்கம் வாக்குறுதி வழங்கியதைப் போன்று வரிகளைக் குறைக்கவோ, பொதுமக்களின் வாகனக் கனவுகளை சாத்தியப்படுத்தவோ மாட்டாது என ஐக்கிய குடியரசு கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பாட்டளி சம்பிக்க ரணவக்க விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், இந்த அரசாங்கம் ஒருபோதும் எரிபொருள், மின் கட்டணங்களையோ வரிகளையோ குறைக்கப் போவதில்லை.

மின்சாரக் கட்டண குறைப்பில் பொதுமக்களை அரசாங்கம் தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலையிட்டு, மின்கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாகன இறக்குமதி மூலம் 280 பில்லியன் வரி வருமான இலக்கை அரசாங்கம் நிர்ணயித்துள்ளது.

அவ்வாறான நிலையில் சொந்த வாகனம் ஒன்று குறித்த பொதுமக்களின் கனவுகள் சாத்தியப்படாது என்றும் சம்பிக்க விமர்சித்துள்ளார். (க-6)

# மின்கட்டணத் திருத்தம்; இறுதித் தீர்மானம் நாளை

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினால் நாளை வெள்ளிக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

2025 ஜனவரி மாதம் முதல் எதிர்வரும் ஜூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு தற்போது நடைமுறையிலுள்ள மின் கட்டண நடைமுறையை அவ்வாறே முன்னெடுத்துச் செல்ல மின்சார சபை யோசனை முன் வைத்துள்ளது.

இந்த யோசனை தொடர்பில் கடந்த டிசம்பர் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் மக்கள் கருத்துக் கணிப்புகளை முன்னெடுக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

அந்தக் கருத்துக் கணிப்புகள் கடந்த 10 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

இதன்போது மின் கட்டணத்தை 20 - 30 சதவீதத்தால் குறைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின் கட்டணத்தை குறைப்பதா அல்லது தற்போது நடைமுறையிலுள்ள கட்டண முறையை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதா என்பது தொடர்பான தீர்மானத்தை நாளை மறுதினம் அறிவிக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (6)

# மாவோ சேதுங் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி அநுர

(பீஜிங்)

சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கின் அழைப்பின் பேரில் சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, நேற்றுக் காலை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு அடங்கலான கண்காட்சியைப் பார்வையிட்டார்.

பின்னர், சீன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான குங் அரண்மனை அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார்.



அதனைத் தொடர்ந்து சீன மக்கள் குடியரசின் ஸ்தாபகர் மாவோ சேதுங் நினைவிடத்திற்குச் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் இந்த சந்தர்ப்பத்தில் இணைந்து கொண்டனர். (6)

# பரு. வாள்வெட்டு இருவர் படுகாயம்

(கரணவாய்)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் ஒன்றில் இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் இடம் பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெயதீபன் கண்ணன் (வயது- 28) விஜயராசா செந்தூரன் (வயது- 29) ஆகிய இருவரும் தலை மற்றும் கால் பகுதிகளில் வெட்டுக் காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பருத்தித் துறை பொலிஸார் விசாரணைகளை கொண்டுள்ளனர். ([illegible])

# வடக்கு ஆளுநரை சந்தித்த விவசாயப் போதனாசிரியர்கள்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக்களக் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் சாதகமாக பரிசீலிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மாகாண விவசாயப் போதனாசிரியர்கள் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விவசாயப் போதனாசிரியர்களின் வெளிக்களப் பணிக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும். தவறிழைத்ததாகக் கண்டறியப்படும் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை மற்றும் பதில் கடமையாற்றும் விவசாயப் போதனாசிரியர்களுக்கு அதற்குரிய கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் மற்றும் நிலுவைக் கொடுப்பனவுகள் மற்றும் வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயப் போதனாசிரியர்களுக்கு இடையிலான இடமாற்றத்தை முன்னெடுக்க விவசாயப் போதனாசிரியர்கள் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக உரிய முறையில் அதைச் செயற்படுத்துமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதேவேளை காலத்துக்கு காலம் விவசாயப் போதனாசிரியர்களுடன் குறைகேள் சந்திப்பு நடத்தப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அதைச் செயற்படுத்துமாறும் ஆளுநர் பணிப்புரை வழங்கினார். (6-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2025

## தெய்வ வழிபாட்டில் நாட்டம் அதிகரிக்கும்



**சனியை இராசி நாதனாகக் கொண்ட கும்ப இராசி அன்பர்களே!**

இந்த ஆண்டு நீங்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி உண்டாகக் காண்பீர்கள். தெய்வ வழிபாட்டில் நாட்டம் அதிகரிக்கும். தள்ளி வைத்திருந்த காரியங்களைச் செய்யத் தொடங்குவீர்கள். பெற்றோருடன் இணக்கமான உறவு உண்டாகத் தொடங்கும்.

**குடும்பம்:** உங்களுடைய தெளிவான எண்ணங்களால் குடும்பத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை உயரும். பெரியோர்களின் தொடர்பு உண்டாகி உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும். நெடுநாளாக உங்களை வாட்டி வதைத்த உடல் உபாதைகளிலிருந்து விடுபடுவீர்கள். வெளியூர், வெளிநாட்டிலிருந்து நல்ல செய்திகள் உங்களை வந்தடையும்.

இலாபகரமான முதலீடுகளைச் செய்து உபரி வருமானம் நிரந்தரமாக வர வழிவகுத்துக் கொள்வீர்கள். மறைமுகக் கலைகளான ஆழ்மனத் தியானம் போன்றவற்றைச் சுயமாகக் கற்றுக் தேர்ந்து அடுத்தவர்களுக்கும் கற்றுத் தருவீர்கள். சகோதர, சகோதரிகளின் குறைகளைப் பெரிதுபடுத்தமாட்டீர்கள். மேலும் முன்பு உங்களை ஏமாற்றியவர்களையும் இந்தக் காலகட்டத்தில் மன்னித்துவிடுவீர்கள்.

**ஆரோக்கியம்:** ஆரோக்கியத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். மருந்து மாத்திரைகளுக்கான செலவினங்கள் குறையும்.

**பொருளாதாரம்:** தனாதிபதி குரு சஞ்சாரத்தல் பொருளாதாரத்தில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும். கடன் பிரச்சினை குறையும்.

அடுத்தவரின் உதவி பெற்று நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த வீட்டு வேலைகள் நிறைவடையும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** உயரதிகாரிகளின் ஆதரவை உறுதுணையாகக் கொண்டு உங்கள் பெரும்பாலான விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். சக பணியாளர்களின் பொறாமைப் பார்வை உங்களைத் துரத்திக் கொண்டே இருக்கும். உங்கள் அன்றாடப் பணிகளில் சிறு குறையும் நேராமல் மிகுந்த அக்கறை செலுத்தி வருவதே மிக அவசியம். எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு, இடமாற்றம் போன்றவை கிடைக்கும். பொருளாதார நிலையில் பற்றாக்குறை நேர இடமில்லை. சிக்கன நடவடிக்கைகளின் மூலம் ஓரளவு சேமிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

**வியாபாரிகளுக்கு:** கடன் விடயத்தில் கவனமாக இருந்தால் மனநிறைவிற்கு குறைவிராது. வியாபாரம் இலாபகரமாகவே நடைபெற்று வரும். நாளுக்குநாள் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று வியாபாரத்திலும் வளர்ச்சியைக் காண்பது அவசியமாகும். அதே நேரத்தில் அவர்களைத் திருப்தியடையச் செய்யும் வகையில் தரமான பொருள்களைக் கொள்முதல் செய்து வைப்பது வியாபாரத்தை பெருக்க உதவும்.

தொழில் வளர்ச்சியும் வருமானமும் சீராக இருந்து வரும் என்றாலும் செலவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் கடன் வாங்கும் அவசியம் ஏற்படாமல் தவிர்க்கலாம். ஒழுங்காகத் திட்டமிட்டு முறைப்படி செயற்படுவதன் மூலம் தொழிலில் படிப்படியாக முன்னேற்றப் போக்கைக் காணலாம்.

**பெண்களுக்கு:** வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிபாராத நன்மைகளைப் பெறக் கூடும். தள்ளிப்போய் வந்த திருமணம் திடீரென்று முடிவாகி திருமண வாய்ப்பைச் சிலர் பெறக்கூடும். உடல்நலத்தில் சிறுசிறு உபாதைகள் அடிக்கடி ஏற்படக்கூடிய நிலை உள்ளதால் கவனமாக இருந்து வருவது நல்லது. கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதன் மூலம் குடும்பத்தில் சில சங்கடங்களைத் தவிர்க்கலாம். வேலை நிமித்தம் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்த தம்பதி இப்போது சேர்ந்து வாழச் சந்தர்ப்பம் உருவாகும்.

**அரசியல்வாதிகளுக்கு:** உங்களுக்கு சில சோதனைகள் நேர இடமுண்டு என்றாலும் நீங்கள் உறுதியான மனத்துடன் இருந்து பொறுமைகாத்து வருவதன்மூலம் தலைமையின் பேரன்பையும், நன்மதிப்பையும் பெறுவீர்கள். மனதை அ[illegible] மற்றவர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி நிலை தடுமாறுவது எதிர்காலத்தில் துன்பம் தரும் என்பதை நீங்கள் புரிந்து கொண்டு நடப்பது அவசியம்.

உங்களுக்குத் தரப்பட்டுள்ள பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதிலேயே உங்கள் நோக்கமெல்லாம் இருந்து வருவது அவசியம்.

**கலைத்துறையினருக்கு:** இடைத்தரகர்கள் போன்றவர்களின் ஒத்துழைப்பை எதிர்பாராமல் நீங்கள் நேரடியாகவே முயற்சி செய்து வருவதன் மூலம் புதிய வாய்ப்புகள் சிலவற்றைப் பெற்று மகிழ இடமுண்டு. பின்னணி இசைக் கலைஞர்கள், பாடலாசிரியர்கள், நடனக் கலைஞர்கள் போன்றோர் கூடுதலான வாய்ப்புகளைப் பெற முடியும். வெளியூர்ப் பயணங்களை அடிக்கடி மேற்கொள்ள நேரும். சக கலைஞர்களிடம் சுமுகமாக நடந்து கொள்வதன் மூலம் உங்கள் நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். வண்டி, வாகனவசதிகள் சிலருக்கு அமையக் கூடிய நிலை உண்டு. பயிற்சி பெற்று வரும் கலைஞர்கள் அரங்கேற்றத்தை நடத்தி மகிழ சில மாதங்கள் பொறுத்து இருக்க வேண்டும்.




**மாணவர்களுக்கு:** நீங்கள் முயற்சித்தால் கல்வியில் நாளுக்கு நாள் முன்னேற்றம் காண முடியும். தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற்று உயர்வகுப்புகளுக்குச் செல்லக் கூடும். இடையில் நிறுத்தி வைத்திருந்த சில பகுதிகளுக்கான தேர்வுகளையும் இப்போது எழுதி நிறைவு செய்வீர்கள். சிலர் உயர் கல்வி கற்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லவும் முயன்று வெற்றி பெறுவீர்கள். ஞாபக மறதி, உடல்சோர்வு சில நேரங்களில் ஏற்படக் கூடுமாயினும், அதற்கு இடங்கொடுக்காமல் இருப்பது நல்லது.

சுற்றுலாப் பயணங்கள் என எங்காவது செல்ல நேரும்போது குளங்களில் குளிப்பதை தவிர்ப்பது நல்லது.

**அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு நீங்கள் செய்த வேலைகளை மற்றவர்கள் செய்ததாகக் கூறி நற்பெயர் எடுத்துக் கொள்வார்கள். கவனம் தேவை. வியாபாரிகள் இலாபம் ஈட்டுவதில் கவனம் செலுத்துவர். உடனிருப்பவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு கவனமுடன் செயற்படுவது நன்மை தரும். வியாபாரம் தொடர்பான அலைச்சல் ஏற்படலாம். வெளியூர் பயணங்களால் இலாபம் அடைவீர்கள். உடனிருப்பவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வேலையில் திருப்தி உண்டாகும். பிள்ளைகளின் கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சதயம்:** இந்த ஆண்டு எந்த காரியத்திலும் கவனம் தேவை. பெரியவர்களிடம் நற்பெயர் எடுத்து மகிழ்ச்சி காண்பீர்கள். மனம் தெளிவடையும். எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும்.

வியாபார போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவார்கள்.

**பூரட்டாதி 1, 2,3ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு திருப்தி தரும். பிள்ளைகள் கேட்பதை வாங்கிக் கொடுத்து சந்தோஷம் காண்பீர்கள்.

இடம், வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும். அதற்கான காரியங்களையும் செய்ய ஆரம்பிப்பீர்கள். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக நினைத்திருந்த ஆன்மீக தலங்களுக்குச் சென்று பலனடைவீர்கள். வெளியூர் பயணங்கள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.

**பரிகாரம்:** செவ்வாய்க் கிழமை தோறும் முருகனை தரிசித்து வணங்க எல்லா துன்பங்களும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வெள்ளி ;

**அதிஷ்ட எண்கள்:** 2, 6

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடவைக் கைத்தொழில் திணைக்களம்
# 2025/2026 கல்வியாண்டுக்காக
# நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களில் 2025 பிப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள பின்வரும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இப் பாடநெறிகள் கட்டணம் அறவிடப்படாமல் முற்றிலும் இலவசமாக நடத்தப்படும்.

01. நடத்தப்படும் பாடநெறியின் பெயர் மற்றும் காலம்

I. கைத்தறி புடவைக் கைத்தொழிலில் அடிப்படை பயிற்சிப் பாடநெறி - 06 மாதங்கள்

இது 06 மாதகால முழு நேர பாடநெறி என்பதோடு கைத்தறி புடவைக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படை அறிவு இந்தப் பாடநெறி மூலம் வழங்கப்படுகிறது.

II. கைத்தறி புடவைக் கைத்தொழிலில் இறுதிச் சான்றிதழ் பாடநெறி - 12 மாதங்கள்

இது 12 மாதகால முழுநேர பாடநெறி என்பதோடு அதன் முடிவில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு புடவைக் கைத்தொழிலில் இறுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

02.ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்

I. அடிப்படை பயிற்சிப் பாடநெறி
- அரசாங்கப் பாடசாலையொன்றில் 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருக்க வேண்டும்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியில் 16 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

II. இறுதிச் சான்றிதழ் பாடநெறி
- சிங்களம்/ தமிழ் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களுடன் க.பொ.த.(சா/தர) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
- 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

பாடநெறியின் நன்மைகள்

1. பாடநெறியின் முடிவில் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் இணைவதற்கான வாய்ப்புக் கிடைப்பதோடு அதனூடாக கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் வணிக வாய்ப்புகளில் இணைவதற்கான பின்னணியை உருவாக்கிக் கொள்ளவும் முடிகின்றமை.
2.கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையில் சுயதொழில் செய்பவராக பணியாற்றுவதற்கான இயலுமை.
3. நெசவு ஆலோசகர் பதவியில் நியமனம் பெறுவதற்கான வாய்ப்பு (உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதோடு போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.)

I. பாடநெறியைப் பயிலும் காலப்பகுதியில் 100.00ரூபா நாளாந்த கொடுப்பனவும் நிறுவனத்திற்கான சீருடையும் வழங்கப்படும்.
II. விடுதிகளுடன்கூடிய பயிற்சி நிறுவனங்களில் சேரும் மாணவர்களுக்கு இலவசமாக தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.(உணவுக்கான செலவுகள் தவிர்த்து)

03. பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து அத்துடன் விண்ணப்பதாரரால் சான்றளிக்கப்பட்ட அவரது பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம், க.பொ.த.(சா/தர) மற்றும் க.பொ.த.(உயர்தர) - (இருப்பின்) ஆகிய சான்றிதழ்களின் நிழற்பட பிரதிகளை இணைத்து 2025.01.31 ஆம் திகதிக்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

| தொ.இல. | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் முகவரிகள் | மாவட்டம் | வதிவிட வசதிகள் | மொழி மூலம் |
|---|---|---|---|---|
| 1 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ. | கொழும்பு | உள்ளன | சிங்களம் |
| 2 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் ஹக்மன வீதி, மாத்தறை. | மாத்தறை | உள்ளன | சிங்களம் |
| 3 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கிரம, வலஸ்முல்ல. | ஹம்பாந்தோட்டை | உள்ளன | சிங்களம் |
| 4 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் அருப்பல வீதி, வட்டபுமுவ, கண்டி | கண்டி | உள்ளன | சிங்களம் |
| 5 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கெட்டம்பே, பேராதனை | கண்டி | உள்ளன | சிங்களம் |
| 6 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கிணிகம, பண்டாரவளை. | பதுளை | உள்ளன | சிங்களம் |
| 7 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கோங்கஹமுல, பனபத்வல, மாத்தளை. | மாத்தளை | உள்ளன | சிங்களம் |
| 8 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மல்பிட்டிய, போயகனே, குருநாகல். | குருநாகல் | உள்ளன | சிங்களம் |
| 9 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கொட்டல, வேயாங்கொடை. | கம்பஹா | உள்ளன | சிங்களம் |
| 10 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மிஹிரிகம, தலாவ. | அனுராதபுரம் | உள்ளன | சிங்களம் |
| 11 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் பின்னவல, ரம்புக்கன. | கேகாலை | இல்லை | சிங்களம் |
| 12 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கலேகான வீதி, கிங்தொட்ட, காலி. | காலி | இல்லை | சிங்களம் |
| 13 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் பண்ட் வீதி, சம்மாந்துறை. | அம்பாறை | உள்ளன | சிங்களம் தமிழ் |
| 14 | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் 194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம் | உள்ளன | தமிழ் |

பணிப்பாளர், புடவைக் கைத்தொழில் திணைக்களம்
3 ஆம் மாடி, செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. : 0112-322895, 0112-322897 மின்னஞ்சல் - dtidev2000@gmail.com

## மாதிரி விண்ணப்பப்படிவம்
## 2025/2026 கல்வியாண்டுக்காக
## நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல்

1. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :
2. முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) :
3. தனிப்பட்ட முகவரி: ....................
4. தொலைபேசி இலக்கம் : ....................
5. வதியும் மாவட்டம் : ....................
6. பிறந்த திகதி : ....................
7. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ....................
8. பால் : ....................
9. திருமண அந்தஸ்து : ....................
10. கல்வித் தகைமைகள் : ....................
11. சேர்வதற்கு எதிர்பார்க்கும் நிறுவனம்: ....................
12. பயில்வதற்கு எதிர்பார்க்கும் பாடநெறி :

| | |
|---|---|
| அடிப்படை பாடநெறி (06 மாதங்கள்) | |
| இறுதிச் சான்றிதழ் பாடநெறி (01 வருடம்) | |

13.வதிவிட வசதிகளுக்கான தேவை: தேவை/ தேவையில்லை
மேலே உள்ள தகவல்கள் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ....................

.................... விண்ணப்பதாரியின் கையொப்பம்

(சி-042)

# கரை ஒதுங்கிய மிதவை வடிவிலான வீடு



(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் நேற்று அதிகாலை 3மணியளவில் மிதவை வடிவிலான வீடு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

சீரற்ற காலநிலை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக மியன்மார், தாய்வான், தாய்லாந்து, மலேஷியா, இந்தியா, போன்ற ஏதாவது ஒரு நாட்டில் இருந்து இந்த வீடு வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

குறித்த வீட்டில் பௌத்த சமயத்தினை தாங்கிய பல மரபு அம்சங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது. (6-33-60)

# 2000 வாகனங்கள் மாயம்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு சொந்தமான சுமார் 2000 இற்கும் அதிகமான வாகனங்கள் அண்மைய தினங்களில் காணாமல் போயுள்ளதாக பொது நிர்வாகம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு காணாமல் போயுள்ள வாகனங்களுள் வெவ்வேறான அதிசொகுசு கார் மற்றும் ஜீப் வண்டிகள் உள்ளடங்குவதாகத் தெரியவருகிறது.

மேலும் , மாகாண சபைகளில் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறு வனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் அவ்வப்போது காணாமல் போயுள்ள நிலையில் குறித்த வாகனங்கள் தொடர்பிலான தகவல்களை கண்டறிய தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (6)

# தீக்கிரையான மரக்காலை



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேம்பிராய் பகுதியில் அமைந்துள்ள மரக்காலை ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இதன்போது பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மர உபகரணங்கள் தீக்கிரையாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக கொடிகாமப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாக கொண்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட கபடிப்போட்டி பரு. ஹாட்லி வெள்ளிப்பதக்கம்



இலங்கை பாடசாலைகள் கபடிச் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட கபடிப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியினர் வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றி உள் ளனர்.

இலங்கை பாடசாலைகள் கபடிச் சம்மேளனத்தினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட கபடிப் போட்டிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கேகாலையில் நடைபெற்றது.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து கேகாலை நிவிசாந் வித்தியாலய அணி மோதியது.

இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் விதமாக விளையாடிய போதிலும் இறுதியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி தோல்வி அடைந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினர். (6-90)

# வட மாகாண தைப்பொங்கல் விழா நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் நடத்தும் வடக்கு மாகாண தைப் பொங்கல் விழா நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு மாதகல் நுணசை முருக மூர்த்தி கோவில் முன்றலில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் கௌரவ விருந்தினராக வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. சுபாசினி மதியழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6)

## பாலகிருஷ்ணன் இருபதுஇருபது தொடர்- 2025

# AB அணி 2 ஆவது சுற்றுக்கு தகுதி

மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் 4 ஆவது ஆண்டாக நடாத்தி வரும் இருபது இருபது தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற போட்டியில் AB அணி T.C.C. அணியை 8 இலக்குகளால் வெற்றிபெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய T.C.C அணி 16.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிரதாப்-26, லவகாந்-17, கபிஸன்-10 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் AB அணியை சார்ந்த டிவிஜன் 3.3 ஓவர்களில் 10 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், பார்த்தீபன் 4 ஓவர்களில் 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், ஞானானந்தசர்மா 2 ஓவர்களில் 18 ஓட்டங்களை கொடுத்து 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

79 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய AB அணி 11.3 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் சர்மா-21, சயந்தன்-11, மதன்-33 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் T.C.C அணி சார்பாக சுரேந்திரன் 2 ஓவர்களில் 11 ஓட்டங்களை கொடுத்து 1 இலக்கினையும் கௌசீகன் 1.5 ஓவர்களில் 6 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.



இப் போட்டியில் வெற்றி பெற்ற AB அணி 2 ஆவது சுற்றில் கே. சீ.சீ.சீ அணியை எதிர்கொள்ளும். இப்போட்டியின் மூலம் AB அணி 4.59 புள்ளிகளையும், T.C.C. அணி 0.98 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# இராசிபலன்

16.01.2025
தை 03, வியாழக்கிழமை
திருதியை பின்னிரவு 5.32 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 12.50 மணிவரை
சுபநேரம் 8.04-9.34 மணிவரை
இராகுகாலம் 2.04-3.34 மணிவரை

சந்திராஷ்டமம்
பூராடம், உத்தராடம்.

வளவன்

**மேஷம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்**
வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், விருந்தினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கடகம்**
நன்மைகள் நடைபெறும் நாள், உங்களின் கருத்துக்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.

**சிம்மம்**
நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கன்னி**
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்ப்பது

**துலாம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்

**விருச்சிகம்**
பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு**
குடும்பத்தினிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு செயற்பட்டு தடைகளை அகற்றும் நாள்.

**மகரம்**
பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தினரிடையே வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.

**கும்பம்**
மதிநுட்பத்தால் மகத்தான காரிய மொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், இல்லத்தில் உள்ள தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்**
உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

அதிகம் ஆராய்பவன் [illegible] செய்து முடிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் உடுப்பிட்டி உப அலுவலக பிரிவிலுள்ள கம்பர்மலை வட்டாரத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்களின் ஆதனவரி அறவிடல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அன்று கம்பர்மலை கலாவாணி சனசமூக நிலையத்தில் பிரதேசசபை செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு ஆதனவரி அறவிடும் நிகழ்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (படம்-மகாலிங்கம்)

# அரசியல் தலையீடுகளின்றி ஆசிரிய இடமாற்றங்கள்

## ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்து

(கொழும்பு)

அரசியல் தலையீடுகள் இன்றி ஆசிரிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

சுமார் ஐயாயிரம் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் குறித்து பரிந்துரை செய்யப்பட்ட போதிலும், உரிய பதிலீடுகள் இல்லை என்ற அடிப்படையில் சில ஆசிரியர்கள் தொடர்ந்தும் அதே பாடசாலைகளில் சேவையாற்ற முயற்சிப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

தூரப் பிரதேசங்களில் சேவையாற்றாத 40 முதல் 50 வயதுடைய ஆசிரியர்களை, தூரப் பிரதேசங்களில் கடமையில் ஈடுபடுத்த வேண்டுமென ஜோசப் ஸ்டாலின் கோரியுள்ளார்.

மேலும் கடந்த காலங்களில் அரசியல் தலையீட்டின் அடிப்படையில் இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டதாகவும் இந்த நிலைமை மாற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (6)


## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 20.02.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத /புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 21.02.2025மற்றும் 22.02.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/ பல்கலைக்கழகம், யாழ்/ கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல : 021-222 2601 : 021-222 2602

(c- 2045)

Pride of the Nation


# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த கும்பல்

## 8 ஆண்டுகள் கடூழிய சிறை

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர் எனக் கூறப்படும் கம்பொல விதான லாகே சமந்த குமார எனப்படும் வெலே சுதா, அவரது மனைவி மற்றும் மற்றொரு பெண்ணுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் எட்டு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித் துள்ளது

ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் மூலம் 17 கோடிக்கும் அதிகமான சொத்துக்கள் மற்றும் பணம் சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட சம்பவம் தொடர்பில், வெலே சுதா உள்ளிட்ட மூவருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, நீண்ட சாட்சிய விசாரணைக்கு பிறகு விசாரணையை முடித்து வைத்த உயர் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை நேற்று அறிவித்துள்ளார். (6)


## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1980 - இந்து
நட்சத்திரம்:சித்திரை
உயரம்: 5' 8"
தகைமை:தொழில்: Computer Science,Customer Service (Canada)
எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்
தொ.இ: B/15071

பிறப்பு:1985 - இந்து
நட்சத்திரம்: சுவாதி 12 இல் செவ்
உயரம் :5' 10"
தகைமை/தொழில்-O/L,Shop(own)
எதிர்பார்ப்பு - படித்த தகுதியான பெண்
தொ.இ: B/15073

பிறப்பு:1990 - இந்து
நட்சத்திரம்: பரணி
கிபா: 32
உயரம் : 6'
தகைமை/தொழில்: BSc,MSc, Assistant manager(pvt)

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்: பரணி 7இல் செவ்
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: G/14988

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 8 இல் செவ்
கி.பா: 38
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: MSc (following), Banker(pvt)
எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கும் ஆண்
தொ.இ: G/14989

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி.பா:56
உயரம்:5' 2"
தகைமை/தொழில்:BSc(Agriculture), Assistant Lecturer

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை



## லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(743)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



## யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

### கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குதற்கான கூறுவிலை கோரல்-2025

2025 ஆம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையினை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சபையில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபா 100.00 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தபால் உறையில் இட்டு பதிவுத் தபாலில் "கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு 31.01.2025 இற்கு முன்னதாக கீழ் வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(c-2044)

செயலாளர்,
யாழ்ப்பாணம்
மாவட்டக் கூட்டுறவுச்சபை.

கூட்டுறவாளர்,
வீரசிங்கம் மண்டப 2 ஆவது மாடி,
இல.12, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## குணமடையும் நாளை எதிர்பார்த்து இருக்கிறேன்

### புற்றுநோயினால் பாதித்த வேல்ஸ் இளவரசி



(லண்டன்)

பிரிட்டனின் வேல்ஸ் இளவரசி கேட் மிடில்டன், புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தபோது கீமோதெரபி சிகிச்சை அளித்த மருத்துவர்களுக்கு நேற்று நேரில் சென்று நன்றி தெரிவித்தார்.

பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்லஸ் மகன் வில்லியமன் மனைவி கேட் மிடில்டன், புற்றுநோய் பாதிப்புக்கு சிகிச்சை பெற்று வந்தார். இளவரசி கேட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அவதி அடைந்து வந்தது அரசு குடும்பத்தினரை கவலை அடையச் செய்தது.

கடந்த ஆண்டு இரு வாரம் மருத்துவமனையில் கேட் மிடில்டன் அனுமதிக்கப்பட்டிருந்த போது புற்றுநோய் பாதிப்பு தெரியவந்து கீமோதெரபி அளிக்கப்பட்டு வந்தது. இளவரசி கேட் மிடில்டன், தனது கீமோ தெரபி சிகிச்சை முடிந்து விட்டது எனக் கூறியிருந்தார்.

இதுகுறித்து அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது,கடந்த ஒரு வருடத்தில் என்னை நன்றாகக் கவனித்துக் கொண்ட மருத்துவர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தேன். கணவர் மற்றும் என்னுடன் அமைதியாக நடந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். ஒரு நோயாளியாக இருந்த காலம் முழுவதும் நான் பெற்ற அறிவுரைகளும், கவனிப்பும் அதிகமானவை.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தெரியும். முழுமையாக குணமடைய நிறைய நாட்கள் ஆகும். நான் தற்போது சிகிச்சை முடிந்து நிம்மதியாக இருக்கிறேன். இருப்பினும் முழுமையாக குணமடையும் நாட்களை எதிர்நோக்குகிறேன். எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (6)

## காட்டுத்தீயின் எதிரொலி தள்ளிப்போகும் ஒஸ்கார் விழா

(வோஷிங்டன்)

உலகில் பலராலும் விரும்பிப் பார்க்கப்படும் ஒஸ்கார் விழா, இந்த ஆண்டு ஒஸ்கார் வரலாற்றில் முதல் முறையாக இரத்து செய்யப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தி சன் செய்தித்தாளின் படி, லொஸ் ஏஞ்சல்ஸில் ஏற்பட்ட பேரழிவு தரும் காட்டுத்தீ காரணமாக 2025 ஆம் ஆண்டுக்கான அக்கடமி விருதுகள் இரத்து செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாம் ஹாங்க்ஸ், எம்மா ஸ்டோன், மெரில் ஸ்ட்ரீப் மற்றும் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் உள்ளிட்ட நட்சத்திரங்கள் தலைமையிலான குழு அக்கடமி விருது வழங்கும் விழா, இறுதி முடிவை எடுக்க நிலைமையைக் கண்காணித்து வருவதாகக் கூறப்படுகிறது.

"இந்த நேரத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் மக்கள் மனவேதனை மற்றும் கற்பனை செய்ய முடியாத இழப்பைச் சந்தித்துள்ள நிலையில், இது போன்ற கொண்டாட்டங்களில் ஈடுபடக் கூடாது என்பதே விழா ஏற்பாட்டு குழுவின் நோக்கமாகவுள்ளது.

தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும், அதனால் ஏற்பட்ட சேதங்களும் வலிகளும் உடனடியாக நீங்காது என்பதே உண்மை. எனினும், தற்போதைய நிலையில், மார்ச் இரண்டாம் திகதி விழாவை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (6)

# இஸ்ரேலின் இராணுவக்

# போர் நிறுத்த உட

# கைச்சாத்திடும் வரை போ

## இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் போர்க்கொடி

(ஜெருசலேம்)

**காசா யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இஸ்ரேல் கைச்சாத்திடும்வரை போரில் ஈடுபடப்போவதில்லை என இஸ்ரேலிய படையினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.**

சுமார் 200 இஸ்ரேலிய படையினர் இது குறித்து கடிதமொன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்த கடிதத்தில் 15 மாதத்தில் யுத்தம் ஒழுக்க நெறி குறித்த எல்லைகளை மீறிவிட்டது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திடா விட்டால் நாங்கள் போரில் ஈடுபடமாட்டோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏழு இஸ்ரேலிய படையினர் ஏற்கனவே தங்கள் ஆயுதங்களை கைவிட்டுள்ளதாக அவர்கள் இது குறித்து ஏபி செய்திச்சேவைக்கு கருத்து தெரிவித்துள்ளனர்.

பாலஸ்தீனியர்கள் கண்மூடித்தனமாக கொல்லப்படுகின்றனர் வீடுகள் அழிக்கப்படுகின்றன. இஸ்ரேலிய படையினருக்கு ஆபத்து இல்லாத போதிலும் இது இடம்பெறுகின்றது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள யுத்த சூன்ய பிரதேசத்தில் அனுமதிவழங்கப்படாத எவரையும் சுட்டுக்கொல்லுமாறு தனக்கு உத்தரவிடப்பட்டதாக தெரிவித்துள்ள இஸ்ரேலின் வில்க் என்ற அதிகாரியொருவர் தான் இராணுவத்தில் தொடர்ந்தும் பணிபுரியப் போவதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் இரண்டு மாத காலம் பணியாற்றிய வேளை தனது படையினர் வீடுகளை

## இந்தியா மிகப்பெரிய கடல்சார் சக்தியாக மாறி வருகிறது

### 3 அதி நவீன போர்க் கப்பல்களை கையளிக்கும் நிகழ்வில் பிரதமர் மோடி





(மும்பை)

மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் உள்ள கடற்படை கப்பல் கட்டும் தளத்திற்கு நேற்று பிரதமர் நரேந்திர மோடி ஐ.என்.எஸ். சூரத், ஐ.என்.எஸ். நீலகிரி, ஐ.என்.எஸ். வஷீர் ஆகிய மூன்று முன்னணி கடற்படை போர்க் கப்பல்களை அறிமுகப்படுத்தி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இதன்போது பிரதமர் மோடி பேசியதாவது, இந்தியாவின் கடல்ச பாரம் பரியம், கடற்படையின் புக பெற்ற வரலாறு, சுயசார்பு இந்திய இயக்கம் ஆகியவற்றிற்கு இன்று ஒ மிகப் பெரிய நாள். சத்ரபதி சிவா மகாராஜ் இந்திய கடற்படைக்கு புதி பலத்தையும் புதிய தொலைநோக்கு பார்வையையும் அளித்தார்.

இன்று அவரது புனித பூமியில் ஆம் நூற்றாண்டின் கடற்படை வலுப்படுத்துவதில் மிகப்பெரி பணியை செய்து உள்ளோம்.

இந்தியகடற்படை மற்றும் க லோரக் காவல்படை மீதான இ நம்பிக்கை தொடர்ந்து அதிகரித் வருகிறது. இன்று ஆசியா வ குடா, ஆப்பிரிக்கா நாடுகள் எ எதுவாக இருந்தாலும், அனை துடனும் இந்தியாவின் பொருளாத ஒத்துழைப்பு வலுவடைந்து இந்தி மிகப்பெரிய கடல் சார் சக்தியாக மா வருகிறது. குறித்த 3 போர்க் கப்ப ளும் இந்தியாவில் தயாரிக்க பட்டவைகள் என்பது பெருமைக்குரி விடயம் எனத் தெரிவித்தார். வி வில் பாதுகாப்புத்துறை மந்தி ராஜ்நாத்சிங், கடற்படைத் தளப தினேஷ் திரிபாதி, மகாராஷ்டிர முத மந்திரி தேவேந்திர பட்னாவி துணை முதல் மந்திரிகள் ஏக்ந ஷிண்டே, அஜித் பவார் உ அதிகாரிகள் உட்பட பலர் கல கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த் கட்டமைப்பு தகர்கிறது
# டன்படிக்கையில்
# பார்புரியப் போவதில்லை



அழிப்பதையும் சூறையாடுவதையும் காசா மக்களின் உடமைகளை நினைவுப் பொருட்களாக திருடுவதையும் பார்த்த பின்னர் 2024 ஜனவரியில் தனது பதவியை துறந்ததாக யுவல் கிறீன் என்ற 27 வயது அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதிருப்தியடைந்துள்ள இஸ்ரேலிய இராணுவத்தினரின் எண்ணிக்கை மிகவும் சிறியதாக தோன்றினாலும் உண்மையில் மேலும் பலர் அதிருப்தியடைந்துள்ளனர் அவர்களும் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்த விரும்புகின்றனர் என இஸ்ரேலிய இராணு வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார். இஸ்ரேலிற்கும் ஹமாசிற்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும் சூழலிலேயே போர் நிறுத்தம் அவசியம் என இஸ்ரேலிய இராணுவத்தினர் போர்க்கொடி தூக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

டல்சார்
புகழ்
ந்தியா
று ஒரு
சிவாஜி
த புதிய
ாக்குப்
யில் 21
டையை
பெரிய
ம் கட
இந்த
கரித்து
வளை
ர் என
னைத்
ளாதார
ந்தியா
மாறி
கப்பல்க
ரிக்கப்
க்குரிய
விழா
ந்திரி
தளபதி
முதல்
விஸ்,
ரக்நாத்
உயர்
கலந்து
(6)

## உயிர் அச்சுறுத்தல்
# ரஷ்யா உட்பட 20 நாடுகளுக்கு பயணம் செய்ய வேண்டாம்




(வோஷிங்டன்)

வட கொரியா, ரஷ்யா உட்பட 20 நாடுகளுக்குப் பயணம் செய்ய வேண்டாம் என்று அமெரிக்க அரசாங்கம் அந்நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்தப் பட்டியலில் வட கொரியா, ரஷ்யா, ஈரான், ஈராக், உக்ரைன், ஆப்கானிஸ்தான், பெலாரஸ், சிரியா, லெபனான், லிபியா, சோமாலியா, சூடான், வெனிசுலா மற்றும் ஏமன் உள்ளிட்ட 20 நாடுகள் இடம் பெற்றுள்ளன.

குறித்த நாடுகளில் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம் ஏற்படும் என்றும் பாதுகாப்பு காரணங்களைக் கருத்தில் கொண்டு இந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் அந் நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. (6)

# பதவி நீக்கம் செய்யப்பட்ட தென்கொரிய ஜனாதிபதி கைது



(சியோல்)

இராணுவ ஆட்சியை அமுல் செய்த விவகாரத்தில் பதவி நீக்கப்பட்ட தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோலை அதிகாரிகள் நேற்று கைது செய்தனர்.

இராணுவச் சட்டத்தை பிரகடனம் செய்த யூன் சுக் இயோலை பதவிநீக்க வலியுறுத்தி, அந்நாட்டு பாரலியில் தாக்கல் செய்யப்பட்ட தீர்மானம் வெற்றி பெற்றது. இதையடுத்து, அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். யூன் சுக் இயோலுக்கு தென் கொரிய நீதிமன்றம் கைது வாரன்ட் பிறப்பித்திருந்தது.

கடந்த 5 ஆம் திகதி தென் கொரியா புலன் ஆய்வு அதிகாரிகள், பதவி நீக்கப்பட்ட தென்கொரியா ஜனாதிபதி யூன் சுக் இயோல் வீட்டிற்கு சென்றனர். யூன் சுக் இயோலை அதிகாரிகள் கைது செய்தபோது அவரது ஆதரவாளர்கள் தடுத்து நிறுத்த முயற்சி செய்தனர். கடைசியில் கைது செய்யாமல் அதிகாரிகள் கிளம்பி விட்டனர்.

இந்நிலையில் நேற்று சிறப்பு புலனாய்வு அதிகாரிகள் யூன் சுக் இயோல் வீட்டிற்கு வந்தனர். இதனை அறிந்த அவரது ஆதரவாளர்கள் வீட்டிற்கு முன் சூழ்ந்தனர். இரு தரப்பினருக்கும் கடுமையான வாக்குவாதம், மோதல் ஏற்பட்டது. கைது முயற்சியைத் தடுத்து நிறுத்த முயற்சித்தனர். இதையடுத்து நீண்ட நேரத்திற்கு பிறகு, அவர் கைது செய்யப்பட்டார். இன் னும் 48 மணி நேரம் அதிகாரிகள் கண்காணிப் பில், யூன் சுக் இயோல் இருப்பார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. "சட்டத்தின் முன் ஆட்சி முற்றிலும் சரிந்து விட்டது" எனக் கைது செய்யப்படுவதற்கு முன், யூன் சுக் இயோல் பதிவிட்ட வீடியோவில் குறிப்பிட்டுள்ளார். (6)

# பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகளின் பட்டியலில் கியூபா நீக்கம்

## உத்தரவை பிறப்பித்த ஜோ பைடன்



(நியூயோர்க்)

பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிக்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து கியூபாவை நீக்குவதற்கான உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பிறப்பித்துள்ளார்.

அமெரிக்காவின் அண்டை நாடாக இருப்பது கியூபா. கம்யூனிச நாடான கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் நல்லுறவு கிடையாது. கியூபா மீது 60 ஆண்டுகளாக பல்வேறு பொருளாதாரத் தடைகளை அமெரிக்க அரசுகள் விதித்து அமுல் செய்து வருகின்றது.

இந்நிலையில் ட்ரம்ப் ஏற்கனவே ஜனாதிபதியாக இருந்த போது, கியூபாவை பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிக்கும் நாடுகளின் பட்டியலில் சேர்த்து அறிவிப்பு வெளியிட்டு இருந்தார்.

ஈரான், சிரியா, வடகொரியா ஆகிய நாடுகளுடன் கியூபாவும் பயங்கரவாதத்துக்கு நேரடியாக ஆதரவு அளிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்புக்கு கியூபா மட்டுமின்றி, ஐரோப்பிய ஒன்றியம், தென் அமெரிக்க நாடுகள் பலவும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

இந்நிலையில் பதவிக் காலம் முடியப்போகும் ஜனாதிபதி பைடன், அந்த பட்டியலில் இருந்து கியூபாவை நீக்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

எனினும் புதிதாக பதவி ஏற்கப்போகும் ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் இதை ஏற்காது எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. கியூபா எதிர்ப்பாளர்கள் நிரம்பி இருக்கும் ட்ரம்ப் நிர்வாகம், மீண்டும் பழையபடி பயங்கரவாத ஆதரவு பட்டியலில் கியூபாவை சேர்க்கவே வாய்ப்பு அதிகம் என்கின்றனர் அமெரிக்க அரசியல் நிபுணர்கள். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலுவையில் ரூ.27 மில்லியன் செலுத்த தவறிய நிறுவனங்கள்

## ஆரம்பமான விசாரணை

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் கீழ் வாகன நிறுத்துமிடங்களை நிர்வகிக்கும் 26 நிறுவனங்கள், கிட்டத்தட்ட 27 மில்லியன் ரூபாய் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறியுள்ளன.

இந்நிலையில் இந்த நிறுவனங்கள் மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் முழுமையான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், 26 நிறுவனங்களால் 2023 ஆம் ஆண்டில், கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான வாகன நிறுத்துமிடங்களுக்கு 204,164,110 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிலுவைத் தொகை இருந்தபோதிலும், அந்த நிறுவனங்கள் 2024 ஆம் ஆண்டில் மீண்டும் வாகன நிறுத்துமிடங்களின் நிர்வாகத்தைப் பெற்றுள்ளன.

இதன்படி, 2024 ஏப்ரல் இறுதிக்குள் அந்த நிறுவனங்கள், மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை 264,859,471 ரூபாயாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்து; இளைஞன் பலி

தணமல்வில - உடவளவை பிரதான வீதியில் 25 ஆவது மைல்கல் அருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக தணமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

தணமல்வில பகுதியிலிருந்து உடவளவை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் தணமல்வில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் மொனராகலை, செவனகல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஆவார்.

இதனையடுத்து பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தணமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 260 | 150 | 180-240 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 1100 | 1000 | 1000-1100 | 1000 |
| தக்காளி | 300 | 350 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 220 | 200 | 200 |
| கோவா | 200 | 200 | 250 | 250 | 300 |
| கரட் | 350 | 350 | 300 | 300 | 400 |
| பூசணி | 120 | 100 | 150 | 100 | 200 |
| புடோல் | 170 | 200 | 200 | 150-200 | 200 |
| வாழைக்காய் | 120 | 140 | 120 | 100-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 380 | 200-450 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 350 | 200 | 250 |
| பாகற்காய் | 800 | 400 | 600 | 500-550 | 800 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 600 | 400 | 700-800 | 600 |
| லீக்ஸ் | 350 | 380 | 300 | 350 | 450 |
| பீற்றூட் | 400 | 550 | 500 | 400 | 600 |
| கறிமிளகாய் | 900 | 400 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 1600 | -- | 2000 |
| போஞ்சி | 400 | 300 | 400 | 250-300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 200 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 150 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 360 | 300 | 200 | 250-320 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 150 | 100-170 | 180-230 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 700 | 700 |
| வெங்காயப்பூ | 650 | 400 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | 200 | 120 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 180 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 90 | 250 |

# இன்று ஒரு தகவல் 301



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## கள்வர்கள்

ஒரு பெரியவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். திருடர்கள் எத்தனை வகை தெரியுமா உனக்கு?

எதற்காக என்னைப் பார்த்து அப்படிக் கேட்டாரோ தெரியவில்லை. இருந்தாலும் நான் அவருக்குப் பதில் சொன்னேன்.

திருடர்கள் எத்தனையோ வகை உண்டு சேர். கார் திருடன், சைக்கிள் திருடன், முகமூடித் திருடன் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இருந்தாலும் என் சிற்றறிவுக்கு எட்டிய வரையில் திருடர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஒன்று இரவில் திருடுகின்ற திருடன். இன்னொன்று பகல் திருடன் என்று சொன்னேன்.

பெரியவர் சிரித்தார். என்ன சிரிக்கிறீர்கள் என்று கேட்டேன். கள்வர்கள் நான்கு வகை என்று ஆரம்பித்தார் அவர். எப்படி என்று கேட்டேன்.

சாப்பாட்டுக்கு இல்லாமல் திருடுவது ஒரு வகைத் திருட்டு. சாப்பாட்டுக்கு இருந்தும் திருடுவது ஒரு வகை.

இதைத் தவிர இன்னும் இரண்டு வகைத் திருட்டு உண்டு. அது என்ன வென்றால்... கடவுளிமிருந்து நாங்கள் திருடும் திருட்டு ஒன்று. எங்களிடம் இருந்து கடவுள் திருடும் திருட்டு மற்றொன்று என்றார் அவர்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன சேர் இது. கடவுளையே திருடன் என்று சொல்கின்றீர்களே ஆச்சரியமாக இருக்கிறது.

ஆமாம்... கடவுளை கள்வன் என்று சொல்வதில்லையா? திருக்கார்வனம் என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அங்கே உள்ள பெருமாளுக்கு கள்வர் என்று தான் பேர். அது மட்டுமல்ல திருமங்கையாள்வார் தம்முடைய திருநெடுந் தொண்டகத்தில் கார்வனத்துள்ளாய்... கள்வா என்று தான் அழைக்கிறார் என்று சொல்லி நிறைய உதாரணங்கள் எல்லாம் சொல்ல ஆரம்பித்தார்.

அதன்பின் அவரிடம் பேசி நான் புரிந்து கொண்ட விபரங்களை இப்போது உங்களிடம் சொல்கிறேன்.

அவர் சொன்ன முதல் வகை திருடர்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் இல்லாமல் திருடுகின்றவர்கள். இவர்களைத் திருத்தி விடலாம். சாப்பாட்டுக்கு இருந்தும் பணம் சேர்க்க வேண்டும் என்ற ஆசையால் பொய்க் கணக்குகள் எல்லாம் எழுதுபவர்கள் தான் இரண்டாவது வகை.

மூன்றாவது வகைத் திருட்டுத்தான் மிகப் பெரிய திருட்டு. இறைவனுக்குச் சொந்தமானதை நம்முடையது என்று நினைக்கின்ற திருட்டு. எது இறைவனுக்குச் சொந்தமானது? ஆத்மா. கடவுளுக்குச் சொந்தமான ஆத்மாவை எங்களுடையது என்று நினைப்பது தான் அந்த மாபெரும் திருட்டு.

இதற்கு பெயர் தான் ஆத்மாபஹாரம். சரி இதற்குப் பரிகாரம் என்ன? எல்லாம் இறைவனுடையது. எங்களுக்கு ஒன்றுமே இல்லை என்று நினைப்பது தான் இதற்குப் பரிகாரம்.

இது எல்லாம் இருக்கட்டும் நான்காவது திருட்டு என்று சொன்னோரே ஆண்டவன் எங்களிடம் இருந்து திருடுவது என்பது எப்படி?

கடவுளைக் கள்வன் என்று சொல்லுகிறார்கள். அது சரி அவர் என்னதான் திருடினார்?

இன்னொருவருக்குச் சொந்தமான ஒன்றை எடுத்து வைத்திருப்பது தான் கள்ளத்தனம். ஆனால் கடவுள் எடுத்துக்கொண்டால் இருப்பது எல்லாம் அவருக்குத் தானே சொந்தம். அப்படி இருக்கும் பொது அவரை எப்படி கள்வன் என்று சொல்வது.

கடவுளுக்கு உருவமே கிடையாது. அரூபமாக இருக்கிறவர். அப்படி இருக்கும் கடவுள் எங்களை மாதிரி உருவத்தில் இருக்கிறான். எங்களைப் போலவே கை, கால் மூக்கெல்லாம் இருக்கிறது. இந்த உருவம் எங்களிடம் இருந்து திருடியது தானே. அவர் தன்னுடைய உண்மையான திருமேனியை எங்களுக்கு காட்டாமல் அதாவது தரிசனம் அளிக்காமல் இருப்பது கள்ளத்தனம் தானே.

அதனால்தான் இதுவும் ஒரு பெரிய திருட்டு. இருப்பதிலேயே பெரிய திருட்டு என்கிறார் அந்தப் பெரியவர்.

திருட்டை ஆன்மீக நோக்கத்திலே அவர் பார்க்கிறார். எங்களுடைய பார்வையிலே இதை விட அபூர்வமான திருட்டு எல்லாம் இங்கே உண்டு. அபூர்வமான திருடர்களும் உண்டு.

ஒரு திருடன் சிறையில் இருந்து விடுதலையாகி வெளியே போனான். சிறிது நாளில் மறுபடியும் திரும்பி சிறைக்கு வந்து விட்டான். அப்போது சிறை அதிகாரி அவனுக்கு அறிவுரை கூறினார்.

இப்படி அடிக்கடி தவறு செய்துவிட்டு சிறைக்கு வருகின்றாயே உனக்கு சொந்தபந்தம் எதுவும் இல்லையா? உன் அப்பா, அம்மா, அண்ணன், தம்பிகள் கூட சேர்ந்து வாழ வேண்டும் என்று ஆசை இல்லையா? என்று கேட்டார்.

அவர்களோடு சேர்ந்து வாழ வேண்டும் என்ற ஆசை எனக்கு நிறைய உண்டு சேர் என்றான் அவன்.

அப்புறம் ஏன் அடிக்கடி இப்படி சிறைக்கு வருகிறாய் என்றார். அவர்கள் எல்லோருமே இங்கே தானே சேர் இருக்கிறார்கள் என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெல்வயல்கள் நீரில் மூழ்கின

## விவசாயிகள் கவலை

(தருமபுரம்)

**பெரும் போக நெற்செய்கையில் ஈடுபட்ட 1000 ஏக்கருக்கு அதிகமான நெல்வயல்கள் தற்பொழுது ஏற்பட்டுள்ள மழையுடனான காலநிலை காரணமாக முற்றுமுழுதாக நீரில் மூழ்கியுள்ளன.**



அறுவடை செய்வதற்கு ஓரிரு நாட்களே இருந்த நிலையில் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நோய்த் தாக்கம் காரணமாக மிக அதிகமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நெற்கதிர்களே இவ்வாறு முற்று முழுதாக நீரில் மூழ்கி அழிவடைந்து உள்ளதாக பாதிக்கப் பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசாங்கம் தமக்கு ஏதேனும் ஒரு வகையில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைகாப்பாற்றுவதற்கு உதவி செய்ய வேண்டும் எனவும்தெரிவித்துள்ளனர். (8-316)





200மணித்தியாலம் இரண்டாம் மொழி சிங்கள பயிற்சியை நிறைவு செய்த 85 வைத்தியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி மாவட்ட திறன்விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

(படம்:-தேவானந்தன்)

# தண்ணிமுறிப்புக் குளம் வான்பாயும் அபாயம்!

## அனர்த்த முகாமைத்துவப் பிரிவு எச்சரிக்கை

(வவுனியா)

தண்ணிமுறிப்புக் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்துவருவது மற்றும் நீரின் வரத்து அதிகரித்ததன் காரணமாக, தண்ணிமுறிப்புக் குளமானது வான் பாயக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தண்ணிமுறிப்புக் குளமானது 21 அடி வரை நீரை சேமிக்கக் கூடியதாக இருக்கின்ற நிலையில் தற்போது 20.10" அடி வரை நீர் மட்டம் உயர்ந்த நிலையிலேயே இவ் அறிவித்தலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது பெய்யும் கன மழை காரணமாக தண்ணிமுறிப்புக் குளம் வான்பாயக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது. எனவே குளத்தின் கீழ் பகுதியில் இருக்கின்ற மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை வெளியிட்டுள்ள அறிவிப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்கள். (8-299)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(மன்னார்)

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (NILET) ZOOM தொழிநுட்பம் ஊடாக வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக மேற்கொண்ட 100 மணித்தியாலம் மற்றும் 150 மணித்தியால இரண்டாம் மொழிப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதல் வழங்கும் நிகழ்வு மற்றும் கலை நிகழ்வு மன்னார் நகர சபை கலாசார மண்டபத்தில் மன்னாரில் பிரபல்யமான இரண்டாம் மொழி ஆசிரியையும், சிரேஷ்ட இரண்டாம் மொழிப் பாட தேசிய மட்ட வளவாளருமான திருமதி இந்துனில் சாகரிகா பிகிறாடோ அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

2020ஆம் ஆண்டு அரச கரும மொழி அமைச்சினால் வெளியிடப்பட்ட 18ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக அரச உத்தியோத்தர்களின் மொழி புலமையை விருத்தி செய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நெறியை பூர்த்தி செய்த பயிலுனர்கள் 175 பேருக்கு மேற்படி சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (8-285)

# இரணைமடுக் குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறப்பு

## மக்களே அவதானம்!

(கிளிநொச்சி)

நிலவும் சீரற்ற காலநிலையினையடுத்து கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, மாங்குளம், கனகராயன்குளம் ஆகிய பிரதேசங்களில் பெய்து வருகின்ற கன மழை காரணமாக அதிகளவான நீர் இரணைமடுக் குளத்துக்கு வந்து கொண்டிருக்கிறமையால் தற்போது 36 அடி 10.5 அங்குல அளவுகளை தாண்டியுள்ளதுடன், குளத்தில் 10.5 அங்குலம் வான் பாய்ந்து கொண்டிருப்பதால் குளத்தின் அனைத்து கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியிடப்படுகின்றது.

எனவே, குளத்தின் கீழ் பகுதியில் வாழுகின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.



அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகின்றமையால் மாவட்டத்தில் உள்ள கனகாம்பிகைகுளம், வன்னேரிகுளம், பிரமந்தனாறு குளம் ஆகியன வான் பாய ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (8-316)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(வவுனியா)

வவுனியா விபுலானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்கான பொது கூட்டம் கல்லூரியின் அதிபர் திருமதி.ஞானமதி மோகனதாஸ் அவர்களின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பழைய மாணவர் சங்கத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

புதிய நிர்வாகத்தில் தலைவராக கல்லூரி அதிபர் திருமதி.ஞானமதி மோகனதாஸ், செயலாளராக பா.லம்போதரன், பொருளாளராக பூ. சர்மிளன், உப தலைவராக க.ஶ்ரீதரன், உப செயலாளராக தி.கார்த்திக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக சபை உறுப்பினர்களாக ஆர்.கபிலன், ஜே.சசிகுமார், வ.பிரதீபன், பி.குமணன், திருமதி எம்.ஜெயலட்சுமி, எஸ்.துவாகரன், செல்வி. எஸ்.சுவேதா, செல்வி கே.ஹம்ஷிகா கணக்காய்வாளராக வி.அனோஜன். ஆலோசகர்களாக ஐ.யோகநாதன், சி.தர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (8-250)

# 50 சதவீதமானவர்கள் மின்னஞ்சலை பயன்படுத்துவதில்லை - ஆய்வில் தகவல்

வட மாகாணத்தின் வன்னிப் பிராந்தியத்தில் 12-40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட டிஜிற்றல் அறிவு பற்றிய ஒரு ஆய்வில் ஏறத்தாழ 50 சதவீத மானவர்கள் மின்னஞ்சலைப் பயன்படுத்து வதில்லை என்று கண்டறியப் பட்டுள்ளது.

அதேவேளை, 17 சதவீதமானோர் மட்டுமே இணைய தளங்கள்மற்றும் சமூக வலைத் தளங்கள் ஊடாக வேலை வாய்ப்பை பெறுகின்றனர் என்றும் 30 சதவீதமானோர் மட்டுமே இணையதளங்கள் ஊடாக அரசாங்க சேவைகளை பெற்றுக்கொள்கின்றனர் என்றும் 30 சதவீதமானோர் சமூக வலைத்தளங்களை அறவே பாவிப்பதில்லை என்றும் இந்த ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

வன்னிப் பிராந்தியத்தின் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 1,347 குடும்பங்களைச் சேர்ந்த 12-40 வயதுக்கு இடைப்பட்ட 2,975 பேரிடம் இந்த ஆய்வினை பிரித்தானியாவின் கேட் நிறுவனம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் ஆகியவை கூட்டாக மேற்கொண்டிருந்தன.

யுனெஸ்கோவின் டிஜிற்றல் அறிவு பூகோள சட்டகத்துக்கு அமைவாக இந்த ஆய்வினை மேற்கொள்ளவதற்கான தொழில்நுட்ப பங்காளிகளாக நேபாளத்தின் ASER, Gali Gali மற்றும் Karkhana Global ஆகிய நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தன.

இந்த ஆய்வுக்கான தகவல் திரட்டும் பணி 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளபப்ட்டிருந்த நிலையில், சில வாரங்களுக்கு முன்னர் அதன் முழுமையான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 682



தரையில் கிடந்த அணைந்து போகும் தறுவாயிலிருந்த சுளுந்தை வந்தியத்தேவன் எடுத்துத் தூக்கிப் பிடித்தான். தாடியும் சடையும் இழந்த காலாமுகனுடைய முகம் சாக்ஷாத் வீர வைஷ்ணவ ஆழ்வார்க்கடியானுடைய முகமாகக் காட்சி அளித்தது. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சிறிது நேரம் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"வைஷ்ணவரே! சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடக்கூடாது என்று எனக்குச் சொன்னீரே? நீர் மட்டும் என்ன செய்தீராம்?" என்று வந்தியத்தேவன் கேட்டான். "உன்னைப் போல் நான் அபாயத்தில் அகப்பட்டுக் கொள்ளவில்லையே, அப்பனே! நான் மட்டும் இப்போது வந்திராவிட்டால்" "நீர் தான் என் கட்டுக்களை அவிழ்த்து விட்டதாக எண்ணமா?"

"நீயே கட்டு அவிழ்த்துக் கொண்டிருந்தாலும் இந்த காட்டிலிருந்து என் உதவியில்லாமல் வெளியே போக முடியாது. நரிகளுக்கு இரையாக வேண்டியதுதான்." "நரிகள் கிடக்கட்டும். இங்கே சற்றுமுன் வந்து கூடி யிருந்த மந்திரவாதி நரிகளை நீர் பார்த்திருந்தால் அந்த நரிகளிடமிருந்து நான் தப் பியது தான் பெரிய காரியம்!"

"அந்த மந்திரவாதிகளை எனக்கும் தெரியும். மந்திரவாதிகள் மட்டுந்தான் வந்திருந்தார்களா? இன்னும் யாராவது வந்திருந்தார்களா?" "சிறிய மீன் ஒன்று வந்திருந்தது. புலியை விழுங்க ஆசைப்படும் அதிசயமான மீன் அது!" "ஆகா! சொல்! சொல்! யார் யார் வந்திருந்தார்கள். என்னென்ன நடந்தது? விவரமாகச் சொல்!"

"நீர் எதற்காக இந்த வேஷம் தரித்தீர்? சாயங்காலம் எங்கே போயிருந்தீர்? போயிருந்த இடத்தில் என்ன நடந்தது?- அதையெல்லாம் சொன்னால் இங்கே நடந்ததை நான் சொல்கிறேன்!"

"நான் சொல்வதற்கு அதிகமாக ஒன்றுமில்லை. இன்று முன்னிரவில் கொள்ளிடக் கரையில் காலாமுகர் மகா சங்கம் கூடும் என்று தெரிந்தது. அங்கே என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காகத்தான் இந்த வேஷம் போட்டுக் கொண்டு போனேன். பார்த்துவிட்டுக் கொள்ளிடக்கரைத் தோணித்துறையில் உன்னை வந்து சந்திக்கலாம் என்று எண்ணினேன். மகாசங்கமும் கூடிற்று பெரிய பழுவேட்டரையர் வந்திருந்தார். காலாமுகர்களின் பெரிய குருவும் வந்திருந்தார். ஆனால் முக்கியமாக யார் வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களோ, அவர் வரவேயில்லை!" "இளவரசர் மதுராந்தகரைத்தானே எதிர் பார்த்தார்கள்?" "ஆம் அது எப்படி உனக்குத் தெரிந்தது?"

"மதுராந்தகர் தஞ்சை சிம்மாசனத்தில் ஏறினால் இராஜ்ய பாரம் அழகாகத்தான் நடைபெறும்!" "ஏன் அவ்விதம் சொல்கிறாய்?"

"ஒரு முரட்டுக் குதிரையை அடக்கி ஆள அவரால் முடியவில்லையே? பழுவேட்டரையர் போன்ற சிற்றரசர்களையும், கலக மூட்டும் காலாமுக சைவர்களையும், சண்டைக்கார வீர வைஷ்ணவர்களையும் அவரால் எப்படி அடக்கி ஆள முடியும்?"

ஆழ்வார்க்கடியான், நகைத்துவிட்டு, "நீ வரும் வழியில் மதுராந்தகரைப் பார்த்தாயா? அவருக்கு என்ன நேர்ந்தது தெரியுமா?" என்று கேட்டான்.

வந்தியத்தேவன் தான் மதுராந்தகரைத் தொடர்ந்து வந்ததையும், திடீரென்று தீவர்த்தியைக் கண்டு அவருடைய குதிரை தறிகெட்டு ஓடியதையும், தான் அவரைச் சிறிது தூரம் தேடிப் போனதையும், கடைசியில் களத்துமேட்டில் குதிரையை மட்டும் பார்த்ததையும் கூறினான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தேனும் வேம்பும்



ஒரு வண்டும் காகமும் வழியில் சந்தித்துக் கொண்டன. "வண்டுத் தம்பி! எங்கிருந்து வருகிறாய்" என்று கேட்டது காகம்..

"சோலையிலிருந்து" வண்டு. என்று பதிலளித்தது.

"சோலையிலிருந்தா? நானும் அங்கிருந்து தானே வருகிறேன். உன்னைக் காணவில்லையே! நீ அங்கு என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று வினவியது காகம்.

"காக்கையண்ணா, சோலையிலே பூஞ்செடிகள் இருக்கின்றனவே, அந்தப் பக்கம்தான் நான் இருந் தேன். பூக்களிலே இருந்த தேனை உறிஞ்சிக் குடித்துக் கொண் டிருந் தேன்" என்று கூறியது. வண்டு. "தேனா? அது எப்படியிருக்கும் ?" என்று கேட்டது காகம்.

"தேன் என்றால் உங்களுக்குத் தெரியாதா? தேன் என்று சொல்லும்போதே இனிப்பாக இருக்கிறதே. அது கூடத் தெரியவில்லையா ? தேன் மிக இனிப்பானது. அதன் சுவைக்கு மேலான சுவையுள்ள பொருள் இந்த உலகத்திலேயே கிடையாது!" என்று கூறியது வண்டு.

"பூ! இவ்வளவு தானா ?" என்று அலட்சியமாகப் பதில் கூறியது காகம்.

"என்ன அண்ணா, பூ என்று சொல்லி விட்டீர்கள்? பூவிலிருந்து கிடைக்கிற தேனுக்குப் பூவுலகிலேயே நிகரான ஒரு பொருள் கிடையாது. அதைக் குடிக்கும் போது வாய்க்குக் கிடைக்கிற சுவையும் வயிற்றுக்குக் கிடைக்கிற நிறைவும் உடலுக்குக் கிடைக்கிற ஊட்டமும் உள்ளத்திற்குக் கிடைக்கிற இன்பமும் அளவிட்டுச் சொல்ல முடியாது அண்ணா!" என்று தேனுண்ட மயக்கத்திலே வெறியோடு பேசியது வண்டு.

"வண்டுத் தம்பி, நீ கண்டது அவ்வளவுதான்! என் வேப்பம் பழத்துக்கு மேலாகவா இதெல்லாம்? வேப்பம் பழம் கிடைத்தால் இந்த உலகத்தில் வேறு உணவே எனக்கு வேண் டாமே ! நான் சோலை யிலே நிறைய வேப்பம் பழம் சாப்பிட்டு விட்டுத்தான் வருகிறேன். என்னிடம் உன் தேனைப் பற்றி அளக் காதே!" என்று கூறி விட்டுப் பறந்தது காகம்.

கருத்துரை :- சோலைக்குச் சென்ற வண்டு தேனைப் பற்றிப் பேசியது. காகமோ வேம்பைப் பற்றிப் பேசியது. உயர்ந்தவர்கள் ஒருவனிடமுள்ள நற்குணங் கண்டு மகிழ்ந்து அவற்றைப் போற்றிப் பேசுவர் தாழ்ந்தவர்கள் அவரிடமுள்ள தீய குணங்களையே எடுத்துப் பேசுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினை விதைத்தவன் வினை அறுப்பான் திணை விதைத்தவன் திணை அறுப்பான். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முன்னையிட்ட தீ முப்புரத்தில் அண்மையில் இட்ட தீ அமெரிக்காவில்

முன்னையிட்ட தீ முப்புரத்தில் பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்... எனப் பாடிய பட்டினத்தடிகள் இன்றிருந்தால், அண்மையில் இட்ட தீ அமெரிக்காவில் எனப் பாடியிருப்பார்.

அந்தளவுக்கு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தை தீ சுட்டெரித்த வண்ணமுள்ளது.

இங்கு முப்புரம் என்பது இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் ஆன கோட்டைகள். இக்கோட்டைகள் ஆகாய மார்க்கத்தில் நிற்கவும் பறக்கவும் கூடியவை எனும்போது, விண்வெளியில் முதலில் கோட்டையை அமைத்து அதில் தங்கியிருந்தவர்கள் தாருகன் என்ற அசுரனின் புதல்வர்கள் என்பது இங்கு புரிதற்குரியது.

குறித்த கோட்டையில் இருந்த அசுரர்கள் தேவர்களைத் துன்புறுத்த, அதனால் பாதிக்கப்பட்ட தேவர்கள் சிவப்பரம்பொருளிடம் தங்கள் நிலைமையை எடுத்துக்கூற, சிவப்பரம்பொருள் தேவர்களைத் காத்தருளும் பொருட்டு தன் சிரிப்பால் முப்புரமாகிய கோட்டைகளை எரித்தார் என்கிறது புராணம்.

இதேபோல சீதாப்பிராட்டியைக் கவர்ந்து வந்த இராவணன் அவரை அசோகவனத்தில் சிறைப்படுத்தினான். சீதையை மீட்க வந்த இராமர் சேனையில் இடம்பெற்றிருந்த அனுமன் இலங்காபுரியை தீயிட்டு எரித்தான் என்கிறது இராமாயணம்.

ஆக, முப்புரம் என்பது தேவர்களுக்குத் துன்பம் இழைக்கப்பட்டதால் சிவப்பரம்பொருளால் எரியூட்டப்பட்டது.

அதேபோல் இலங்கை வேந்தன் இராவணன் கற்புடைத் தேவி சீதையைக் கவர்ந்து இராமபிரானுக்குப் பெரும் துன்பம் இழைத்ததனால் இலங்கையை அனுமன் எரியூட்டினான்.

இப்போது அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் ஒன்றான லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் பற்றி எரிகிறது.

காட்டுத்தீயினால் இப் பேரனர்த்தம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டாலும் உலக வல்லரசாகிய அமெரிக்காவை தீ சுட்டெரிக்கிறது எனும் போது அதற்கும் ஏதோவொரு காரணம் இருக்க வேண்டும்.

ஆம், அமெரிக்கா ஒரு பெரும் வல்லரசு. உலகில் எங்கு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனைத் தண்டிக்கவும் தடுத்து நிறுத்தவும் கூடிய அதிகார பலம் பொருந்திய நாடு.

இருந்தும் தனக்கு ஆதரவான – தனக்கு வேண்டிய நாடுகள் எத்தகைய கொடிய யுத்தங்களை நடத்தினாலும் அது கண்டு பேசாதிருப்பது அல்லது அக் கொடிய யுத்தத்தை நடத்துகின்ற நாட்டுக்கு ஆயுதங்களை வழங்குவது, ஆதரவு கொடுப்பது என்ற அறத்துக்குப் புறம்பான செயலை அமெரிக்கா செய்து வருவது மறுக்க முடியாத உண்மை.

ஆம், காஸா மீது இஸ்ரேல் நடத்துகின்ற கொடிய யுத்தத்தில் எத்தனை எத்தனை ஆயிரம் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இருந்தும் அது தொடர்பில் அமெரிக்கா வாய்திறக்கவே இல்லை.

ஆம், இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவது அமெரிக்காவின் கொள்கை என்பதற்காக, காஸாவில் அப்பாவிக் குழந்தைகளைக் குண்டு போட்டுக் கொல்வது, வைத்தியசாலைகள் மீது தாக்குதல் நடத்துவது என்பன எந்த வகையில் நியாயமாகும். இங்கு அமெரிக்கா அறத்தைத் தவறியது.

இந்நிலையில்தான் அமெரிக்காவுக்குத் தண்டனை கொடுக்க இயற்கை துணிந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இது அமெரிக்காவுக்கு மட்டுமல்ல மனித உயிர்களை வதை செய்கின்ற அனைத்து நாடுகளுக்கும் தனிநபர்களுக்கும் பொருந்தும்.

# நெல் அறுவடைக்காலத்தில் கொட்டித் தீர்க்கும் கனமழை

## காலநிலையை அவதானித்து அறுவடை செய்க வடமாகாண ஆளுநர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நெல்லை அறுவடை செய்யக்கூடிய விவசாயிகள் காலநிலை எதிர்வுகூறலைக் கருத்திலெடுத்து அறுவடை செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாகத் தொடரும் சீரற்ற காலநிலை தொடர்பாக அவசர கலந்துரையாடல் இணையவழியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

விவசாயிகள் நெல் அறுவடைக் காலத்தில் திடீரென ஏற்பட்ட மழை வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் குளங்கள் வான்பாய்வதாக மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்துக்கான நீர்வரத்து அதிகமாகவுள்ளபோதும் குறைந்தளவான நீரே திறந்துவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் சு.முரளிதரன் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை மாவட்டத்தின் சில பகுதிகளில் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்திலும் சில வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன எனவும் கலந்துரையாடலின் போது மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சிறிய நீர்பாசனக் குளங்கள் இரண்டு உடைப்பெடுத்துள்ளதாக இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளங்களில் 47 குளங்கள் தற்போது வான்பாய்ந்து கொண்டிருப்பதாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் ஆளுநருக்கு தெரியப்படுத்தினார்.

தற்போதைய நிலையில் மழை வீழ்ச்சி குறைந்து வருவதாகவும் குளங்களுக்கான நீர்வரத்துக் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன் அதற்கு அமைவாக இன்று (நேற்று) மாலையிலிருந்து படிப்படியாக வான்கதவுகள் மூடப்படும் என்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் அதற்கு முன்னதாக நெல்லை அறுவடை செய்யக் கூடிய விவசாயிகள் அதனை அறுவடை செய்வதில் கூடுதல் கவனம் செலுத்துவதன் ஊடாக அழிவுகளைக் குறைக்க முடியும் என ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாணப் பிரதம செயலர் இளங்கோவன் மாவட்ட அரசாங்கதிபர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் இணையவழியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நீதிமன்ற ஊழியரொருவர் ஐஸ் போதையுடன் கைது

(கொழும்பு)

10 கிராம் 800 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நீதிமன்ற ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தற்காலிகமாக தங்கியிருந்த வெல்லம்பிட்டிப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் புதுக்கடை நீதிமன்றில் கடமையாற்றும் கஹவத்த பகுதியைச் சேர்ந்த நபர் எனவும் சந்தேக நபர் இந்த ஐஸ் போதைப்பொருளை கஹவத்தப் பகுதியில் விற்பனை செய்து வந்துள்ளமை பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

## கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து ஆணொருவர் சடலமாக மீட்பு

தலவாக்கலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்தேக்கத்திலிருந்து நேற்று ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மதியம் 3 மணியளவில் இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமொன்று மிதப்பதைக்கண்ட பிரதேசவாசிகள் தலவாக்கலைப் பொலிஸாருக்கு அறிவித்த நிலையில், சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட ஆண் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரிழந்தாரா? அல்லது நீர்த்தேக்கத்தில் பாய்ந்து உயிரிழந்தாரா? என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், உயிரிழந்தவர் சுமார் 30 தொடக்கம் 40 வயதுக்கிடைப்பட்ட ஆண் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

## ஆண்டின் ஆரம்பமுதலே அதிகரித்தது டெங்கு

நாட்டில் இவ்வருடத்தின் முதல் 14 நாட்களில் 2,352 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 374 ஆக பதிவாகியுள்ளதுடன் கொழும்பு மாவட்டத்திலிருந்து 304 டெங்கு நோயாளர்களும் காலியில் 169 டெங்கு நோயாளர்களும் கண்டியில் 134 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் நாட்டில் மொத்தமாக 49,887 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 24 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## சைக்கிளைத் திருட முற்பட்டவரை தட்டித்தூக்கிய இளைஞர்கள்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் சந்தியை அண்மித்த பகுதியில் துவிச்சக்கரவண்டியை திருட முற்பட்டகுற்றச்சாட்டில் நபரொருவர் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டியைத் திருடிக் கொண்டு தப்பிக்க முயன்ற நிலையில் பிரதேச இளைஞர்கள் சந்தேக நபரை பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30)

## குருதிக் கொடை நிகழ்வு

பசுந்தேசம் மற்றும் ஏனைய பொது அமைப்புக்கள் இணைந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மாபெரும் குருதிக் கொடை நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி திறக்கப்பட்டுள்ள நிலையில் முதன் முறையாகக்குருதிக்கொடை நிகழ்வினை மேற்படி பொது அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

“வேருக்கு நீர் கொடுத்தால் அது மரத்தினைக் காக்கும் உடலுக்கு குருதி கொடுத்தால் அது மனிதனைக் காக்கும்” எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்ததான நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி - I

13

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**1. ஒருமை வட்டார மட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்**

ஒருமை வட்டார மட்டத்திலான வட்டாரத்தின் சகல வாக்களிப்பு நிலையங்களினதும் வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது குழு சார்பாக தேர்தலில் போட்டி யிட்ட அபேட்சகர் குறித்த வட்டா ரத்தின் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்படுவார்.

இதன் பிரகாரம் மேலே உதாரணத்தில் (அட்டவணை 7ல்) காட்டப்பட்டுள்ளவாறு ஓ கட்சியானது 1, 2, 4, 6, 7, 8, 9, 10, 11, 12, 14 ஆகிய ஒருமை வட்டாரங்களில் வெற்றியீட்டியுள்ளதனால், அக்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்ட குறித்த அபேட்சகர்கள் அவ்வட் டாரங்களின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

Y கட்சி 3, 5, 13 ஆகிய வட்டாரங்களில் வெற்றியீட்டியுள்ளதனால் அக்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்ட குறித்த அபேட்சகர்கள் அவ்வட்டாரங்களின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

Z கட்சி எதுவித வட்டாரத்திலும் வெற்றியீட்டாத காரணத்தினால் வட்டாரத்திலிருந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

**2. பன்மை வட்டார மட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்**

பன்மை வட்டாரமொன்றில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு சார்பாக தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்கள் இருவர் அல்லது மூவர் அவ்வட்டாரத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இதன் பிரகாரம் மேலே உதாரணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஓ கட்சியானது 15 என்னும் பன்மை (இரு உறுப்பினர்கள்) வட்டாரத்தில் வெற்றியீட்டியுள்ளதனால், அக்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்ட குறித்த அபேட்சகர்கள் இருவரும் அவ்வட்டாரத்தின் உறுபபினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

**3. விகிதாசார அடிப்படையில் உறுப்பினர் எண்ணிக் கையைத் தீர்மானித்தல்**

உள்ளூராட்சி அதிகார சபை ஒன்றின் நிருவாகப் பிரதேசத்தின் சார்பாக தேர்தலில் போட்டியிட்ட சகல அரசியற் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் மொத்தக் கூட்டுத் தொகையை குறித்த உள்ளூராட்சி அதிகார சபைக்காக தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையால் பிரிக்கப்பட்டு வரும் சராசரி அளவு தீர்க்கமான மதிப்பு ஆகும்.

இந்தத் தீர்க்கமான அளவினால் ஒவ்வொரு அரசியற் கட்சியும், சுயேச்சைக் குழுவும் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகள் பிரிக்கப்படும் பொழுது குறித்த அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு உரிய முழு உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு அரசியற் கட்சிக்கும், சுயேச்சைக் குழுவுக்கும் உரிய உறுப்பினர் எண்ணிக்கையிலிருந்து அவர்கள் வட்டார மட்டத்தில் பெற்றுக்கொண்ட உறுப்பினர் எண்ணிக்கையைக் கழித்து வரும்

வொரு அரசியற் கட்சிக்கும், சுயேச்சைக் குழுவுக்கும் உரிய விகிதாசார அட்டவணைக்குரிய உறுப்பினர் எண்ணிக்கையாகக் கருதப்படும்.

ஏதேனுமொரு அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு உரிய குறித்த எஞ்சி வரும் எண்ணிக்கை ஒற்றை மதிப்பெண்ணாக இருப்பின், அதாவது விகிதாசார முறைக்கு உரிய எண்ணிக்கையிலும் விட வட்டார மட்டத்தில் தெரிவு செய்யப்படும் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அந்த மேலதிக எண்ணிக்கைக்குச் சமமாக உள்ளூராட்சி அதிகார சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகமாகும். (இதுமேன்மிகை / overhang எனப்படும்)

இதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட உதாரணத்தின் அடிப்படையில், விகிதாசார முறைமையில் தெரிவு செய்யவேண்டியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை (16 X 2) / 3 = 10 ஆகும். எனவே மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை (16+10) = 26 ஆகும்.

அட்டவணை-7ன்படி, மேலே குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைக்கு செல்லுபடியான 57 539 (27938 + 23274+6327= 57539) வாக்குகள் கிடைத்துள்ளன. இந்த 57539 வாக்குகளை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களான 26ஆல் பிரித்தால் (57539/26) = 2213 என விடைவரும். இது ஒரு உறுப்பினருக்கான சராசரி மதிப்பு வாக்குகளாகும்.

இந்தத் தீர்க்கமான அள வினால் ஒவ்வொரு அரசியற் கட்சி யும், சுயேச்சைக் குழுவும் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகள் பிரிக்கப்படும் பொழுது குறித்த அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு உரிய முழு உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது.

அதாவது ஒரு உள்ளூராட்சி சபையிலிருந்து தெரிவாகவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையால் பிரிக்க வரும் ஈவு, ஆரம்பச் சுற்றில் ஒரு உறுப்பினரைப் பெறுவதற்குத் தேவையான வாக்கு எண்ணிக்கையாகும்.

மேற்படி ஈவினால் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் பெற்ற வாக்குகளை வகுக்கும் போது கிடைக்கும் ஈவுகளுக்குச் சமனான எண்ணிக்கையில் முதற் சுற்றில் உறுப்பினர்கள் ஒதுக்கப்படுவார்கள்.

முதற் சுற்றின் பின்னர் இன்னும் ஒதுக்குவதற்கு இடங்கள் இருப்பின் முதற் சுற்றில் வகுக்கும்போது கிடைத்த மிச்சங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். கூடுதலாக மிச்சம் கிடைத்த கட்சிக்கு மிகுதி யாகவுள்ள இடங்களில் முதலாவது இடம் வழங்கப்படும்.

முற்றாக ஒதுக்கி முடியும் வரை ஏனைய இடங்களும் இவ்வாறே கூடிய மிச்சம் உள்ள கட்சிகளுக்கு வழங்கப்படும்.

இதன்படி கட்சி ஓக்கு 13 ஆசனங்களும் கட்சி லு க்கு 10 ஆசனங்களும், கட்சி ணுக்கு 3 ஆசனங்களும் ஒதுக்கப்படும். இதனை அட்டவணை 8 காட்டுகிறது.

இதன்படி விகிதாசார முறைமையில் போட்டியிட்ட கடசிகளுக்கு எத்தனை உறுபபினர்கள் கிடைத்துள்ளார்கள் எனபது அறிவிக்கப்படும். அவர்கள் அதன்படி உறுப்பினர்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

விகிதாசார வேட்புமனுப் படடியலில் பெயரிடப்பட்டவர்கள் அலைது வடடார முறையில் தோறறவர்கள் கூட நியமிககபபடலாம்.

உள்ளூராட்சி அதிகார சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை அட்டவணை 9 காட்டுகிறது.

**அட்டவணை-8 விகிதாசார முறையில் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்கள்**

| கட்சியின் பெயர் | பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகள் | சராசரி மதிப்பு | ஆசனக் கணக்கீடு | முதல் சுற்றில் ஆசனம் | மீதி வாக்கு | 2ம் சுற்றில் ஆசனம் | விகிதாசார முறையில் மொத்த ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| X | 27938 | 2213 | 27938/2213 | 12 | 1382 | 1 | 13 |
| Y | 23274 | 2213 | 23274/2213 | 10 | 1144 | - | 10 |
| Z | 6327 | 2213 | 27938/2213 | 2 | 1901 | 1 | 3 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமெந்து...

காரிகள் முன்வைத்த யோசனைக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு கிலோகிராம் சிமெந்தின் விலை ஒரு ரூபாயால் குறைக்கப்படும்.

இதனால் ஒரு மூடை சிமெந்து விலை 100 ரூபாயால் குறையும் என்று நிதி அமைச்சக அதிகாரிகள் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அரசாங்க நிதி பற்றிய குழு, கடந்த 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய போது இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம-7)

## போலி வாக்குறுதி...

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வீழ்ந்துவிட்டது, இனி அந்தக் கட்சிக்கு மீள் எழுச்சி இல்லை என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது.

இறுதியாக நடைபெற்ற இரண்டு தேர்தல்களும் எமக்குத் தோல்விகளைத் தந்தாலும் நாம் அதனைப் படிக்கற்களாக மாற்றியுள்ளோம்.

இனிவரும் தேர்தல்கள் எமக்குச் சாதகமாகவே அமையும். அதாவது அந்தத் தேர்தல்கள் எமக்கு வெற்றி வாய்ப்புக்களையே பெற்றுத் தரும். நாம் மீண்டெழுவோம்.

தேர்தலின்போது போலி வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்த கும்பலை விரட்டியடிக்க மக்கள் தயாராகி வருகின்றனர்" என்றார். (ம-7)

## 13 சுற்றுலா...

துள்ளது.

இலங்கையில் தற்போதைக்கு 26 சுற்றுலா வலயங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக காலத்துக்குக் காலம் வேறு சிற்சில இடங்கள் தற்காலிகமாக சுற்றுலாப் பயணிகளின் வரவேற்பைப் பெற்று வருகின்றன.

எனினும் தற்போதைக்கு உள்ள நிரந்தர சுற்றுலா வலயங்கள் 26க்கும் மேலதிகமாக 13 சுற்றுலா வலயங்களைப் புதிதாக உருவாக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை-குச்சவெளி, யாழ்ப்பாணம், மாத்தளை, கண்டி போன்ற மாவட்டங்களில் இந்த புதிய சுற்றுலா வலயங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (ம-7)

## காசாவில்...

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக போர் நீடித்து வருகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதியன்று, இஸ்ரேலுக்குள் புகுந்து நூற்றுக்கணக்கானோரை பிணைக்கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றனர்.

இதையடுத்து, காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்கா, எகிப்து, கட்டார் நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இதனிடையே, அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் டிரம்ப், வருகிற 20ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

தான் பதவி ஏற்று இரு வாரங்களுக்குள் பிணைக்கைதிகள் விடுவிக்கப்படவில்லை எனில் மிக மோசமான விளைவுகளை ஹமாஸ் படையினர் சந்திக்க நேரிடும் என டிரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பாலஸ்தீனிய கைதிகள் இஸ்ரேலிய பிணைக்கைதிகளை பரிமாற்றம் செய்ய இரு தரப்பும் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் 15 மாதங்களாக நடைபெற்று வரும் காசா போர் முடிவுக்கு வரும் சூழல் ஏற்பட்டுள்ளது. (ம-7)

## ஒரே சீனக்...

வில் உள்ள மக்கள் மண்டபத்தில் உள்நாட்டு நேரப்படி மாலை 5.00 மணிக்கு நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல பிரச்சினைகள் குறித்து இருதரப்புக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளது.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க,

சீனாவின் பொருளாதாரம், தொழிற்றுறை மற்றும் தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மனித மேம்பாட்டில் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்தில் இலங்கை மிகவும் மகிழ்ச்சியடைகிறது."

எமது அரசாங்கம் இருதரப்பு மற்றும் பலதரப்பு உட்பட அனைத்துத் துறைகளிலும் ஒரே சீனா கொள்கையை ஆதரிக்கிறது."

பல தசாப்தங்களாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சீனா முக்கிய பங்கு வகித்து வருகிறது. மேலும் இந்த விஜயம் நமது நாடுகள் மற்றும் மக்களின் பரஸ்பர செழிப்பை வலுப்படுத்தும் என்று நம்புகிறேன்" என்றார். (ம-7)

## எதிர்காலத்தில்...

மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் அபிவிருத்தியின் புதிய யுகத்திற்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி இதன் போது வலியுறுத்தினார்.

அதேபோது நெருங்கிய நட்பு நாடுகள் என்ற வகையில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழில் துறை சார்ந்த 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அரச தகவல் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே. பண்டார ஆகியோரும் பங்கேற்றனர். (ம-7)

## இலங்கை...

நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்றுப் பிற்பகல் சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அஸ்வெசும...

குடும்பங்களுக்கு வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபாய் உதவித்தொகையை 17,500 ரூபாயாகவும் 8,500 ரூபாய் உதவித்தொகையை 10 ஆயிரம் ரூபாயாகவும் ரூ. 2,500 உதவித் தொகையை ஐயாயிரமாகவும் உயர்த்த அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (ம-7)

---

**மஹஜன சம்பத** — திகதி 2025.01.15 — சீட்டிழுப்பு இலக்கம் 5717 — F 9 1 6 4 5 8
**அத சம்பத** — F 6 4 5 8 — சீட்டிழுப்பு இலக்கம் 292

**தன நிதானய** — திகதி - 2025.01.15 — சீட்டிழுப்பு இலக்கம் - 1747 — J 01 03 30 44 J — 21786

**மெகா பவர்** — திகதி 15/01/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2065 — G 02 21 51 59 70

**லக்கி 7 VIP** — திகதி 2025.01.15 — சீட்டிழுப்பு இலக்கம் 543 — T 4 8 0 1 9 4 T

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3959 — சீட்டிழுப்பு திகதி 15.01.2025 — C 03 05 14 25 — C

**HANDAHANA** உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.01.15 — சீட்டிழுப்பு இலக்கம் 1026 — விருச்சிகம் 09 24 28 55 விருச்சிகம் — 78786 — 14

**உத்தியோகபூர்வ முடிவுகள்** — 15.01.2025 — வெற்றி வாரம் 425 — C 0 9 8 8 4 4 — 78862 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,180,098.40

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 2691 — சீட்டிழுப்பு திகதி 2025.01.15 — தினம் புதன்கிழமை — 03 14 42 63 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,064,935.20

**சனிதா** — திகதி 15.01.2025 — வெற்றி வாரம் 4852 — 12 23 42 69 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,979,016.40 — 53038

**Jayoda** — திகதி 2025.01.15 — வெற்றி வாரம் 2095 — 01 22 31 61 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,340,160.00

**ராசி** — சீட்டிழுப்பு வாரம் 4403 — சீட்டிழுப்பு திகதி 15.01.2025 — தினம் புதன்கிழமை — 13 16 19 24 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,540,503.60 — 269333

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — G 22 14 17 54 58 — 1867 — 15.01.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,960,327.60

**ADA KOTIPATHI** — புதன்கிழமை — வெற்றி வாரம் 2517 — 2025.01.15 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,982,463.60 — 15 47 54 60 X — 873285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் அர்ச்சுனாவின் எம்.பி. பதவியை இரத்துச் செய்க

## 31 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணை

இராமநாதன் அர்ச்சுனாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 31ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதிய சுதந்திர முன்னணியின் தலைவர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எம்.கோபலல்வ முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யத் தனது கட்சிக்காரருக்குக் கால அவகாசம் வழங்குமாறு பிரதிவாதியான பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கோரினார்.

நீதியரசர்கள் குழாம் உரிய வகையில் அமைக்கப்படாததால், அடுத்த வழக்கு விசாரணையின் போது இந்தக் கோரிக்கையை முன்வைக்குமாறு நீதியரசர், சட்டத்தரணியிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து, குறித்த மனு எதிர்வரும் 31ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடந்த பொதுத் தேர்தலின் போது அரச வைத்தியராகக் கடமையாற்றிய நிலையில், வேட்பு மனுவைச் சமர்ப்பித்ததாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச சேவையிலிருந்து விலகாமல் இவ்வாறு வேட்பு மனு தாக்கல் செய்வது சட்ட விரோதமானது எனவும் அது தேர்தல்கள் சட்ட விதிகளுக்கு முரணானது எனவும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# அரசின் அனுபவமற்ற கலாநிதிகள் கொல்லர்க்களை விட மோசமானவர்கள்

## மேர்வின் சில்வா விமர்சனம்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இருப்பதாக கூறப்படும் கலாநிதிகள், பேராசிரியர்கள் என்போர் கொல்லர்களின் நிலையை விட மோசமானவர்கள் என்று மேர்வின் சில்வா விமர்சித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டி, தலதாமாளிகையில் வழிபாடுகளை மேற்கொண்ட பின் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எவ்வளவுதான் உயர் கல்வியைப் பெற்றிருந்தாலும் அது நடைமுறை அனுபவம் கொண்டதாக இருக்க வேண்டும்.

நடைமுறை அனுபவமற்ற கல்வியானது எந்தப் பயனும் அற்றது. அவ்வாறானவர்கள் கலாநிதிகளாக, பேராசிரியர்களாக இருந்தாலும் சாதாரண கொல்லர்களை விடவும் மோசமான நிலையில் தான் இருப்பார்கள்.

இந்த அரசாங்கத்தில் இருக்கும் கலாநிதி, பேராசிரியர்களின் நிலையும் அதுதான் என்று மர்வின் சில்வா தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# பழைய பல்லவியைப் பாடாமல் அரசியல் கைதிகளை விடுவியுங்கள்

## மனோ கணேசன் எம்.பி வலியுறுத்து

"அரசியல் கைதிகள் இல்லை" என்ற பழைய பல்லவியைப் பாடாமல் தமிழ் அரசியல் கைதிகளை உடனேயே விடுவியுங்கள் என தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் பாராளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்துத் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"சிறையில் அரசியல் கைதிகள் இல்லை" என்ற கருத்தைத்தான் எப்போதும் எல்லா சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களிலும், எல்லா அமைச்சர்களும் சொன்னார்கள். அரசாங்க தரப்பு அப்படிதான் சொல்வார்கள். அவர்களுக்கு "பயங்கரவாதி". மக்களுக்கு "போராளி". பாலஸ்தீனம் முதல் இலங்கை வரை, உலகம் முழுக்க போராட்டங்கள் நிகழ்ந்த நாடுகளில் இப்படி தான்.

இந்நாட்டில், 1971ல் தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே ஆயுதம் தூக்கி பின்னர், 1989லும் ஆயுதம் தூக்கி ஜேவிபி போராட்டம் செய்த போது, கைதாகி சிறையில் இருந்த ஜேவிபி போராளிகளை, அன்றைய அரசாங்கம், "பயங்கரவாதிகள்" என்றது. ஆனால் ஜேவிபியினர், "இல்லை, அவர்கள் அரசியல் போராளிகள்" என்றார்கள்.

ஆனால், அன்று ஆயுத போராட்டம் செய்த ஜேவிபியே, இன்று இப்படிக் கூறுகிறது. "அரசியல் கைதிகள் இல்லை" என்று கூறி, அவர்களுக்கு பயங்கரவாதிகள் பட்டம் சூட்ட முனைகிறது என்றார். (ம-7)


## வேலையாட்கள் தேவை

கொழும்பு மற்றும் யாழ். நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- சாரதி (கொழும்பில் தங்கி நின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது.)

யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 076 440 8948

(3030)

## வேலையாட்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள பலசரக்குக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

077 590 9501
077 831 2284
077 215 4940

(3033)

XMARD

கோப்பாய், மருதனார்மட கிளைகளில் இதே விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1180~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~698~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
074 2327 545

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
074 1011 345

புதியபிரிவுகள் ஆரம்பம்
18/01/2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat [ Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
(Medium – Tamil & English)

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level I,II
Qualification:-G.C.E. A/L 3 Passes
(Medium – Tamil &English)

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF
Qualification:- G.C.E. A/L 3 Passes
( Medium – Tamil & English)

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

Certificate Course in English

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0774405917

(C-2046)



# தையல்

பெண்களுக்கான ஆடைகள் தைத்து கொடுக்கப்படும்.

077 167 6458

(C-2049)

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

48/= ~~80/=~~

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்

076 800 6500

(746)

# தேவை

நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையில் இயங்கும் பழக்கடை ஒன்றிற்கு அனுபவம் உள்ள வேலையாள் தேவை.

077 036 6388

(3031)

V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas- All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-2050)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org